பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 3	ஞாயிறு 11-2-40 பிரமாதிஸு தைமீ 29உ	முத்து 14

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
பழைய பாடம்		390
உலக வர்த்தமானம்		392
இது தெரியுமா?		393
அதிகப் பிரசங்கம்	"அதிகப்பிரஸங்கி"	394
சங்கீத மகாநாடு	ஏ. என். கல்யாணசுந்தரம் எம்.ஏ.	395
ஒலிப்பேய்	ர. வெங்கட்டராமன்	397
சாதக பக்ஷி	க. ரு. ருமய்யா	403
ஆய்தத்தின் வலிமை	வே. ரா. சுந்தரராமன் எம்.ஏ.	406
சிறுவர் பகுதி	"கி. மூ"	411

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

பழைய பாடம்

வைஸ்ராய் இப்பொழுது கற்பிக்கும் பாடம் பழைய பாடம் தான். புதிதாக அவர் ஒன்றும் சேர்க்கவில்லை. பம்பாய் பிரசங்கத்தில் நிறைந்திருந்த ஆர்வம் இப்பொழுது அவர் பேச்சில் இல்லை என்று தான் சொல்லவேண்டும். சென்ற திங்களன்று நடந்த காந்தி வைஸ்ராய் சந்திப்பு தற்கால அரசியல் நிலைமையை ஒழுங்குபடுத்தும் என்று நம்பி இருந்தோம். ஆனால் இவ்விரண்டு பேரும், பேச்சுக்குப் பிறகு விடுத்திருக்கும் அறிக்கைகள் அதற்கு நேர்மாறாக விருப்பது தான் வருத்தத்தைக் கொடுக்கிறது. வைஸ்ராய் தன் பழைய பல்லவியைத் தான் பாடுகிறார்.

டொமினியின் அந்தஸ்தடைந்த இந்தியாவின் தற்காப்புக்கொள்கைப் பிரச்னையை நிர்ணயிப்பது சிரம சாத்தியமான காரியமாம். அதற்காகச் சற்று ஆலோசித்து தான் செய்யவேண்டுமாம். இரண்டாவதாக, முன் நவம்பர் மாதம் பேசிய படியே, லார்ட் ஜெட்லண்டைப் பின்பற்றி, "டொமினியன் பதவிக்குச் செல்ல குறுக்குவழி 1935-ம் வருஷத்து சமஷ்டியை ஏற்றுக்கொள்வது தான்" என்று போதிக்கிறார். மூன்றாவதாக தன் எக்ஸிகுடிவ் சபையைப் பெருக்கி அதில் தலைவர்களுக்கு ஸ்தானம் அளிப்பதாகக் கூறுகிறார். இம்மூன்று முறைகளும் இந்தியர்களால்ஒப்புக்கொள்ளப்பட்டால் இந்தியாவுக்கு என்று ரிஸர்வ் செய்யப்பட்ட டொமினியின் பதவி நிச்சயம் கிடைத்துவிடும், என்று வைஸ்ராய் கூறுகிறார். இவற்றை இந்தியர்கள் ஒத்துக்கொண்டு சர்க்காரை நடக்கும்படி செய்வதற்கு என்னென்ன பிரயத்னங்கள் செய்ய வேண்டுமோ அவ்வளவையும் செய்யத் தயாராக இருப்பதாக வைஸ்ராய் சொல்லுகிறார்.

வீண் பேச்சு

இப்படி வைஸ்ராய் சொல்வதைக் கேட்டு நடந்தால் எவ்விதம் இந்தியா விமோசனம் அடையும், என்பதைச் சற்று கவனிப்போம். வைஸ்ராய் சொல்லுவதுபோல் டொமினியின் பதவியை இந்தியா சுலபமாக அடைந்துவிடும் பக்ஷத்தில், அதன் தற்காப்பு பிரச்னையை நிர்ணயிப்பது மாத்திரம் ஏன் வைஸ்ராய் கூறுவதுபோல் அவ்வளவு சிரம ஸாத்யமான காரியமாக இருக்க வேண்டுமென்பது தான் புரியவில்லை. மற்ற டொமினியன்கள் எப்படி தங்கள் தங்கள் தற்காப்பைச் செய்து வருகின்றன? அமெரிக்காவில் கனடா இல்லையா? தென்னாப்பிரிக்கா இல்லையா? அவற்றைக் காட்டிலும் அதிக கெட்டிக்காரத்தனமாகச் செய்ய சாமர்த்தியம் இல்லாவிட்டாலும் அவற்றைப் போலவாவது இந்தியா தன் தற்காப்பை அமைத்துக் கொள்ளாதா என்ன? இரண்டாவதாக வைஸ்ராய் சொல்லுவதும் ஒப்புக்கொள்ளத் தகுந்ததாக இல்லை. "1935-ம் வருஷத்திய சமஷ்டி இந்தியாவுக்கு முற்போக்கையளிக்காது. அதனால் இந்தியாவுக்கு சுயேச்சை வராது" என்று தானே இந்திய காங்கிரஸும் தலைவர்களும், அடிக்கடி கதறி வருகிறார்கள். இந்தியாவின் அரசியலமைப்பை இந்தியர்களே ஏற்படுத்த வேண்டும், என்ற நோக்கத்துடன் தானே இப்பொழுது காந்திஜியும் வைஸ்ராயைக் கண்டு பேசப்போனார். இவை எல்லாம் தெரிந்திருந்தும், வைஸ்ராய் மறுபடியும்

சமஷ்டியின் உத்தம அம்சங்களை பூதக் கண்ணாடி மூலம் இந்தியர்களுக்குக் காண்பிப்பது திருப்திகரமாக இல்லை. கோரிய முக்கிய அம்சங்களைக் கவனிக்காமல், வைஸ்ராய் தன் எக்ஸிகுடிவ் கவுன்ஸிலைப் பெருக்கி அதில் தேசியத் தலைவர்களுக்கு ஸ்தானம் கொடுப்பதாகக் கூறி வெறுங் கையை முழம்போடுவதில் பயன் தான் என்ன ?

அபயப் பிரதானம்

வைஸ்ராய் இதோடு நிற்கவில்லை. செவ்வாய்க்கிழமை மஹம்மத் அலி ஜின்னா சாகேப் அவர்கள் வைஸ்ராயைப் பேட்டிக் கண்டு பேசியபொழுது, முஸ்லிம்லீக் தலைவர் வெகு உருக்கமாக தங்களையும் தங்களைப்போல் த்ரிசங்கு ஸ்வர்க்கத்தில் தவிக்கும் மைனாரிட்டிகளையும் உண்மையில் பிரிட்டிஷ் சர்க்கார் காப்பாற்றவேண்டும் என்று பிரார்த்தித்தாராம். அதற்கு வைஸ்ராய் தனது வழக்கம்போல் "மைனாரிட்டிகளின் நலனை நான் காப்பாற்றுகிறேன்" என்று அபயப் பிரதானம் செய்தார் என்று விடுத்த அறிக்கை கூறுகிறது. இதைப்போன்ற அபயப்பிரதானத்தை இந்தியாவின் மகா பெரிய ஸ்தாபனம் காங்கிரஸே மைனாரிட்டிகளுக்கு அளிக்கும்போது ஜின்னா ஏன் வைஸ்ராயைப்போய் வருந்தி வேண்டிக் கொள்ள வேண்டும், வைஸ்ராய்தான் ஏன் அவ்வித மைனாரிட்டிகளைக் காப்பாற்றும் பாரத்தைத் தன் தோளில் போட்டுக் கொள்ள வேண்டும், என்பதுதான் புதிராக இருக்கிறது. மைனாரிட்டிகளுக்கு அபயப் பிரதானம் கொடுக்க பிரிட்டிஷ் சர்க்கார் முன் வருகிறவரையில் நிலைமை ஒழுங்குபடாது. ஜின்னா ரேங்குவார். இது உண்மையே. இதுபற்றி வைஸ்ராய் சற்று யோசித்து மைனாரிட்டிகளின் அடத்துக்குத் தூபம் போடாமலிருந்தால் விசேஷம். முஸ்லிம் லீக்கின் ராயல் கமிஷன் பிரேரணையைத் தள்ளுபடி செய்ததனால் நிலைமை எப்படி ஒழுங்கு ஆயிற்று என்று வைஸ்ராய் அறிந்திருக்க வேண்டும். பஸ்லுல் ஹக்கும், பஞ்சாப் பிரதம மந்திரி ஸர் ஸிகந்தரும் இன்று ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைப்பற்றிப் பேசுவது அதனால்தான் என்று வைஸ்ராய் தெரிந்துகொள்ளவேண்டும்.

சமரஸத்திற்கு அறிகுறி

ஆனாலும் இம் முறை வைஸ்ராய், ஊக்கத்துடன் இந்தியப் பிரச்னையைக் கவனித்து தற்கால அரசியல் நெருக்கடியைத் தீர்க்க மிகுந்த சிரமம் எடுத்துக் கொள்ளப் போவதாக அறிக்கை வெளியிட்டது, எதிர்காலத்திலாவது இந் நெருக்கடியைத் தீர்க்க வழி ஏற்படும், என்ற நம்பிக்கையை யளிக்கிறது. மஹாத்மாவின் அறிக்கையும் அதைத் தான் தெளிவாகக் காட்டுகின்றது. "பேச்சு முறிந்துவிட்டதே என்று நான் சிறிதும் ஏமாற்றமடையவில்லை. இத் தோல்வியை நானும் அவரும் (வைஸ்ராயும்) வரப்போகும் வெற்றிக்கு ஸாதனமாகக் கையாளுவோம்" என்று காந்திஜி தன் அறிக்கையில் கூறியதும் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய சமரசத்திற்கு சூசகமாக இருக்கிறது.

ஒரே வழி

இதனால் இனி நடக்கப்போகும் பேச்சுகள் இதுவரையில் இருந்ததைப்போல் இராது என்று நன்கு விளங்குகிறது. முஸ்லிம் லீகின் சார்பாக வங்காள பிரதம மந்திரி பஸ்லுல் ஹக்கும் பஞ்சாப் பிரதம மந்திரி ஸர் ஸிகந்தரும், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபடுவது, பாராட்டத்தக்கது. முஸ்லிம் தலைவர்களின் மனப்பான்மை அனுகூலமாக மாறி இருக்கும் இந்த சமயமே தகுந்த தருணம். பலித்தால் இப்பொழுதுதான் இந்திய-பிரிட்டிஷ் விவாதம் முடிவுக்கு வர வேண்டும், என்பதை வைஸ்ராய் இனி தெரிந்துக் கொள்ளாமலிருக்கமாட்டார். தெரிந்துக்கொண்டால் அவருடைய அடுத்த முயற்சி எல்லாத்துக்கும் வேர் போன்ற அரசியல் நிர்ணய சபையை அமைக்க காங்கிரஸுடன் கலந்தாலோ

(394-ம் பக்கம் பார்க்க)

உலக வர்த்தமானம்

பால்கன் பிரதேசங்கள் மகாநாடு சென்ற பிப்ரவரி 2-ம் தேதி பெல்கிராட்டில் நடந்தது. தற்கால உலக நிலைமையறிந்து பால்கன் பிரதேசங்கள் நடுநிலைமை வகிப்பதாக நிச்சயம் செய்தன. இதுபோன்ற சண்டைக் காலங்களில் தங்களைப்போன்ற சிறு ராஜ்யங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக நடந்துகொண்டால் தான் சண்டைக் கட்சியினரால் தங்களுக்கு ஒருவிதமான தீங்குமில்லாமல் இருக்கலாம் என்று தங்கள் ஒற்றுமையை ஊர்ஜிதம் செய்தன. தங்கள் வியாபாரத்தைப் பெருக்க பல தீர்மானங்கள் செய்தன. பால்கன் கும்பலில் சேர்ந்த ஒவ்வொரு சிறு ராஜ்யமும் தன் சகோதர ராஜ்யத்தோடு வியாபாரத்தை விருத்தி செய்வதாகத் தீர்மானித்தன. சென்ற வருஷத்தில் ருமேனியா-ஜெர்மனி ஒப்பந்தப்படி ருமேனியா ஜெர்மனிக்கு எண்ணெய் சப்ளை செய்யும் என்று, தெரிகிறது.

ஜப்பானியக் கப்பல் அஸாமமாரு விஷய சம்பந்தமாக டோக்கியோவிலிருக்கும் பிரிட்டிஷ் ஸ்தானிகரும் ஜப்பானிய வெளிநாட்டு மந்திரியும் கலந்து பேசினார்கள். இது சம்பந்தமாக இருதிரத்தாருக்குமிடையில் சமரஸம் ஏற்பட்டிருக்கிறது என்று செய்தி கூறுகிறது. கைப்பற்றப்பட்ட 21 ஜெர்மானியர்களில் 9 பேர்களை பிரிட்டன் விடுதலை செய்து ஜப்பானிடம் ஒப்புவித்து விட்டதாம். இனி இது போன்ற சங்கடங்கள் ஏற்படாது என்றும் சேம்பர்லின் ஜப்பானுக்கு பதில் அனுப்பினாராம்.

ரஷ்ய-பின்னிஷ் யுத்தம் வெகு மும்முரமாக நடந்து வருகிறதாம். லாடோகா ஏரிப் பிரதேசத்தில் சுமார் 15,000 போர்வீரர்களை ரஷ்யா இழந்தது என்று செய்தி கூறுகிறது. பின்லாந்தின் வெற்றி எதிர்பாராததாக இருக்கிறதாம். 240 ரஷ்யக் கப்பல்கள் யுத்தத்தில் பலியாயினவாம்.

ஆறு நிபந்தனைகள் கொண்ட ஒரு சமரஸத் தீர்மானத்தை கோயரிங் வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. இதற்கு பிரிட்டிஷாருடைய மனப்பான்மை எப்படி இருக்கும் என்பது தெரியவில்லை.

சென்ற திங்கள்கிழமை காந்திஜி வைஸ்ராயைக் கண்டு சுமார் $2\frac{1}{2}$ மணி நேரம் பேசினார். பேச்சு முடிவில் வைஸ்ராய் விடுத்த அறிக்கையில், இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் சகல துறைகளிலும் பேச்சு பரவியதாகவும், இந்தியாவுக்கு டொமினியின் பதவி சீக்கிரத்திலேயே வரக்கூடியதென்றும் கண்டிருந்தது. காங்கிரஸ் கோரிக்கை பிரிட்டிஷார் இணங்குவதற்கு மேல் இருப்பதால் கொஞ்ச நாட்கள் பேச்சைத் தள்ளிப் போட்டிருப்பதாக அறிக்கை கூறுகிறது. மறுபடியும் காந்திஜி-வைஸ்ராய் சந்திப்பு எப்பொழுது நேரும் என்பது தெரியவில்லை.

காந்திஜி விடுத்த அறிக்கையில் விஷயம் நன்றாகப் புலப்படுகிறது. "இந்தியாவின் நிலைமையை ஒழுங்குபடுத்த இன்னும் பிரிட்டனிடத்தில்தான் அதிகாரம் இருக்கிறது" என்று அதிருப்தியுடன் எழுதினார். ஆனால் "எங்கள் பேச்சு முறிவுபற்றி நான் ஏமாற்றமடையவில்லை. எங்கள் இருவருக்கும் இத் தோல்வியே வெற்றியடைய உபயோகிக்க வேண்டிய சாதனமாக இருக்கும்" என்று கூறுகிறார்.

காந்தி-வைஸ்ராய் சந்திப்பு ஒன்றையும் முடிவு கட்டாவிட்டாலும், அரசியல் வட்டாரங்களில், எதிர்காலத்திலாவது ஓர்வித சமரஸம் ஏற்படும் என்ற நம்பிக்கை பரவி வருகிறது.

சென்ற செவ்வாய்க் கிழமை முஸ்லிம்லீக் தலைவர் ஜின்னா வைஸ்ராயைக் கண்டு பேசினார். அதில் ஜின்னா, லீக்கை போன்ற மைனாரிட்டி ஸ்தாபனங்களை பிரிட்டிஷ் சர்க்கார் ரக்ஷிக்கவேண்டும் என்று வைஸ்ராயைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது. அதற்கு வைஸ்ராய் அபயப்ரதானம் அளித்திருக்கிறாராம்.

அடுத்த ராம்காரில் நடக்கப்போகும் காங்கிரஸ் கூட்டத்தில் மௌலானா அபுல்காலாம் அஸாத்தை ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்கள் நிச்சயித்திருக்கிறார்கள். சிலர் எம். என். ராயையும் போட்டி போடச் சொல்லி இருப்பதாகவும் செய்தி கூறுகிறது. எம். என். ராயும் பதவிக்கு போட்டி போடுவார் என்று தோன்றுகிறது.

சென்னை காங்கிரஸ் மாளிகை தீ விபத்து பற்றி பிப்ரவரி 5-ம் தேதி முதல் விசாரணை நடந்துவருகிறது.

இது தெரியுமா

சுரங்கத் தொழில் அபிவிருத்தி

சுரங்கத் தொழில் கற்பதில் முன்போ லில்லாமல், இந்தியர்கள் இப்பொழுது மிகுந்த கவனம் செலுத்தி வருகிருர்கள். தான்பாட் இந்திய சுரங்கத் தொழில் பள்ளிக்கூடத்திலும், பனரிஸ் சர்வ கலாசாலை, உலோகப் படிப்பு, சுரங்கத் தொழில் படிப்பு இலாகாவிலும், முன்னிலும் அதிகமாக மாணவர்கள் சேர்ந்து படித்து வருகிருர்கள்.

இந்திய சுரங்கத் தொழில் பள்ளிக் கூடத்தில் 1938-ல் முதல் கூட்டத்தில் 76 மாணவர்கள் படித்தார்கள். அதற்கு முந்தின கூட்டத்தில் 68 பேர்தான் படித்தார்கள். அதே வருஷத்தில் நவம்பர் மாதக் கூட்டத்தில் 87 மாணவர்கள் இருந்தார்கள். பெனரிஸில் 1938-ல் கூட்டம் ஆரம்பத்தில் 116 மாணவர்கள் கல்வி கற்று வந்தார்கள். ஆனல் அதற்கு முந்திய கூட்டத்தில் 95 மாணவர்கள் தான்.

இன்னும் ராணிகஞ்ச், ஜாரியா முதலிய இடங்களிலுள்ள பயிற்சிச் சாலைகளில் பலர் கல்வி பயின்று வருகின்றனர்.

யுத்தத்தினுல் பத்திரிகை விலை உயர்வு

யுத்தம் ஆரம்பமானது முதல், காகிதம், அச்சு இவைகளின் விலை உயர்ந்து விட்டபடியால், பம்பாயில் அரையணுவுக்கு விற்கப்பட்டு வந்த தினசரிப்பத்திரிகைகள் எல்லாம் ஒரு அணுவுக்கு உயர்த்தப்பட்டு விட்டனவாம். தற்சமயம் பம்பாயில் அரையணு குஜராத்தி பத்திரிகையே கிடையாதாம். ஜன்மபூமி, ஹிந்துஸ்தான், பிரஜாஹித், பம்பாய் சமாசார முதலிய பத்திரிகைகளின் சொந்தக்காரர்கள் தங்களுக்குள் கலந்து பேசிக்கொண்டு, தினசரிப் பத்திரிகையின் விலையை ஒரு அணுவுக்கு உயர்த்தியிருக்கிருர்களாம்.

பம்பாய் நகரத்திலுள்ள நான்கு மகாராஷ்டிர பத்திரிகைகளில் இரண்டு பத்திரிகைகள் யுத்தம் ஆரம்பமானதும் தங்கள் விலையை அரையணுவிலிருந்து ஒரு அணுவுக்கு உயர்த்திக்கொண்டன. பத்திரிகைகளின் பக்கங்களும் குறைந்துவிட்டனவாம்.

மைசூர் ஸில்க் தொழிற்சாலை

மைசூர் ஸில்க் தொழிற்சாலையை (Mysore Silk Filatures Ltd) டி. நர்ஸிபூரில் சென்றசெப்டம்பரில் வெகு குதூஹலத்துடன் திவான் திறந்துவைத்தார். அவர் அன்று செய்த பிரசங்கம் அத்தொழிற்சாலை மிகப் பெரிதாக விருத்தியடையும் என்ற நம்பிக்கையைப் புகட்டியது. வெகு சீக்கிரத்தில் அத்தொழிற்சாலை விருத்தியடைந்திருக்கிறது. இன்று அதே தொழிற்சாலை ஆஸ்திரேலியாவில், மெல்பர்ன் நகரத்திலுள்ள ஒரு கம்பெனியுடன் வியாபாரம் செய்ய பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. 500 பவுண்டுக்கு குறையாமலும், இன்னும் தொழிற்சாலையில் மிகுந்தால் அந்த சரக்கையும், மேற்படி ஆஸ்திரேலியா கம்பெனிக்கு ஒவ்வொரு மாதமும் சப்ளை செய்வதாக ஒப்பந்தம் செய்துகொள்ளும் போலிருக்கிறது. மைசூரில் உற்பத்தி செய்யப்படும் ஸில்க்குக்கு ஒரு விசாலமான சந்தை கிடைக்கும் போலிருக்கிறது.

அதிகப் பிரசங்கம்

("அதிகப்பிரசங்கி")

மைனாரிட்டி சலுகை.

"மைனாரிடி சலுகையை" இப்பொழுது ஜனாப் ஜின்னா ஒரு "பாத்யதையாக" (Right) மாற்றிப் பேசிவருகிறார். சலுகையைப் பாத்யதையாக மாற்றினது ஜனாப் ஜின்னா அல்ல. தென்னிந்திய ரயில்வே அதிகாரிகள் 'கக்கூஸ்' விஷயத்தில் செய்ததை அவர் காப்பி அடித்திருக்கிறார்.

நமது பள்ளிக்கூடங்களில், கீழ் வகுப்பு மாணவர்களுக்கு அவஸரமாக மலஜல பாதை வந்து விட்டால், அவர்கள் "ஸார்-ஸார்" என்று உபாத்தியாயரைக் கூப்பிட்டு தங்கள் கைவிரல்களில் இரண்டு அல்லது ஒன்றைக் காட்டி, ஆசிரியர் அனுமதி பெற்று, தங்கள் பாதையை நிவர்த்தி செய்து கொள்வார்கள். இக்கதி தென்னிந்திய ரயில்வே ஐரோப்பியப் பிரயாணிகளுக்கும் நேர்ந்திருக்கிறது. இந்தியர்களுக் கென்று தகரத்தால், கக்கூஸ்களும், ஐரோப்பியர்களுக் கென்று நன்றாய் கட்டப்பட்ட பிரத்தியேகமான கக்கூஸ் ஒன்றும் பெரிய ஸ்டேஷன்களில் உண்டு. "ஐரோப்பியர்களுக்கு மாத்திரம்" என்று எழுதப்பட்ட கக்கூஸ் எப்பொழுதும் பூட்டப் பட்டிருக்கும். யாராவது ஒரு ஐரோப்பியருக்கு அவஸரமாக ஜலபாதை ஏற்பட்டு விட்டால், அவர் ஸ்டேஷன் மாஸ்டரிடம் ஓடி, நம் பள்ளிக்கூடம் மாணவர்கள்போல் கைவிரலைக்காட்டி, தான் ஒரு ஐரோப்பியர் என்பதை நிஸ்ஸந்தேகமாக நிரூபித்து, அவரிடமிருக்கும் சாவியைப்பெற்று, கக்கூஸை திறந்துத் தன் ஜலபாதையை நிவர்த்தி செய்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் மைனாரிட்டி ஐரோப்பியர்களுக்கு ரயில் அதிகாரிகள் காட்டிய சலுகை, ஒரு பாத்யதையாக விளங்குகிறது. இதைத் தான் ஜனாப் ஜின்னா காப்பியடித்திருக்கிறார்.

இந்த "சலுக்கை — பாத்யதை" ஐரோப்பியருக்கு மாத்திரம் என்? இதற்குக்காரணம் என்னவென்றால், சரியானபதில் இராமசாமிப்பெரியாரால் தான் கொடுக்கமுடியும், "ஐரோப்பியர்கள் ஆரியக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். திராவிடர்களை அவமதிக்கவேண்டுமென்று ஆரியத்திராவிடப் பார்ப்பனர் செய்த சூழ்ச்சி வலையில் ரயில்வே அதிகாரிகள் சிக்கி இவ்விதம் செய்திருக்கிறார்கள்" என்பதே பெரியாரின்சரியான பதில்.

(391-ம் பக்கத் தொடர்ச்சி)

சிக்க முன்வரவேண்டும். அரசியல் நிர்ணய சபையைத் தவிர வேறெதுவும் இந்தியப் பிரச்னையைக் கவனிக்க இயலாது. அரசியல் நிர்ணய சபை அமைக்க அனுஷ்டிக்கவேண்டிய நிபந்தனைகள் சிலநாளைக்குமுன் 'பாரதமணி'யின் தலையங்கத்தில் விவரமாகக் காண்பிக்கப்பட்டிருந்ததை வாசகர்கள் படித்திருப்பார்களென்று நம்புகிறோம். அதன்படி அரசியல் நிர்ணய சபையை அமைத்து காரியத்தை நடத்துவதில்தான் இருதிரத்தாருக்கும் அனுகூலமுண்டு. வேறு வழிகளைப் பின்பற்றினால் எதிர் பார்த்த பலன் அளிப்பது சந்தேகம்.

சங்கீத் மஹாநாடு

(ஏ. என். கல்யாணஸுந்தரம்)

“ஒன்றிற்கு இரண்டு உபத்திரவத்திற்கு மூன்று” என சென்னையில் கிறிஸ்துமஸ் வாரத்தில் மூன்று சங்கீத மஹாநாடுகள் நடைபெற்றன. விவாதங்கள், வீண்சண்டைகள், “கர்நாடக சங்கீதத்தில் ஹிந்துஸ்தானி சங்கீதத்தைக் கலக்கலாமா” என்பதைப்பற்றி முசிரியின் அக்ராசனப் பிரசங்கம், பத்திரிகைகளின் கோபம், முசிரியின் “பல்டி” இதற்குச் சில பத்திரிகைகளின் பக்கபலம், சங்கீத சாஸ்திர விஷயத்தில் மெஜாரிடி மைனாரிடித் தீர்ப்புகள் முதலிய பல தமாஷ்கள் மஹாநாடுகளில் வெகு விமரிசையாக நிறைவேறின. இம்மாதிரி மஹாநாடுகளால் சங்கீதம் முன்னேறிற்றா அல்லது பின் வாங்கியதா, இல்லையென்றால் பேசாமல் முன்போலவே இருந்துவிட்டதா என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

“பைன் ஆர்ட் ஸொஸைடியில்” பொதுவான விஷயங்களைப் பொதுவாகப் பேசி, மெதுவாகத் தப்பித்துக்கொண்டு விட்டார்கள். வேடிக்கைகளெல்லாம் சங்கீத வித்வத் சபையில் தான் (Music-Academy) நடந்தன. நான் அவைகளைக் கண்ணால் பார்க்கவும் இல்லை, காதால் கேட்கவும் இல்லை. பத்திரிகைகளில் தான் படித்தேன். இதிலிருந்து நான் அறிந்த விஷயம் ஒன்றே—அதாவது முசிரி அடித்த “பல்டி” வீண்.

ஆனந்த பைரவி ராகத்தின் ஆரோஹ அவரோஹக் கிரமத்தைச் சங்கீத வித்வான்கள் தீர்மானம் செய்ததே இதற்கு அத்தாட்சி. “காகலி நிஷாதத்தையும், அந்தர காந்தாரத்தையும்” இந்த ராகத்தில் கலப்பதைப்பற்றிப் பெரிய விவாதம் நடந்ததாம். “கலப்பது பிசகு, சாஸ்திர விரோதமானது” என்று சிலர் ஆதாரங்களுடன் பேசிப் பாடினார்களாம். “கலக்கலாம்” என்று சிலர் அபிப்பிராயப்பட்டார்களாம். கடைசியாக முடிவு, டைகர் வரதாச்சாரியார் பிரேரித்தபடி, “ஆரோஹணம்:—ஸ, க, ரி, க, ம, ப, த, ப, ஸ,—அவரோஹணம்;-ஸ, நி, த, ப, ம, க, ரி, ஸ;-ப, நி, ஸ, என்ற பிரயோகம் அனுமதிக்கப்படுகிறது. “ம, க, ம,” பிரயோகத்தில் “அந்தரகாந்தாரம்” வருகிறது. இரண்டுதைவதங்களும் உண்டு. காகலி நிஷாதம் சேர்ந்த அபூர்வப் பிரயோகமும் உண்டு. இது இருபதாவது மேளத்தின் ஜன்யம்.”

இவ்விதம் முடிவு செய்வதற்குள், இருகாந்தாரங்கள், இருதைவதங்கள், இருநிஷாதங்கள் ஆகிய ஸ்வரங்கள், சபைக்கூட்டத்தில் மாட்டிக் கொண்டு விழித்தன. இந்த வம்பில் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பிக்கும் பாக்கியம், “சுத்தரிஷபத்திற்கும், ப்ரதிமத்யமத்திற்கும்” தான் கிடைத்தது. இவ்விருஸ்வரங்களும், ஸ்வரக் கூட்டத்தில், ஆனந்த பைரவி ராகத்திற்கு ஹரிஜனங்களாய் விளங்கின. 20-வது மேளத்தில் பிறந்த ஆனந்த பைரவியில், ஜனக ராகத்தில் இல்லாத அநேகஸ்வரங்கள், மெஜாரிட்டியின் தீர்மானப்படிப் புகுந்துவிட்டன. இவ்விதம் சபை தீர்மானித்ததால் முசிரி அடித்த பல்டி வீணாகி விட்டது. இந்த அன்யஸ்வரங்கள், யாரால், எப்பொழுது, ஏன் புகுத்தப்பட்டன என்பதைச் சிறிது ஆராய்ந்தால் முசிரி பல்டிக்கு இடமே இல்லை.

மேலும் இந்த ராகமானது 1930-ஆம் வருஷத்தில், ஆலோசிக்கப்பட்டு, “ஆரோஹணம் :—ஸ,க,ரி,க,ம,ப,த,ப,ஸ-- அவரோஹணம்.—ஸ,நி,த,ப,ம,க,ரி,ஸ,—20-வது மேளத்தைச் சேர்ந்தது. ப,த,ப, என்ற ஸஞ்சாரங்களில் “சிச்ருதிதைவம்” வருகிறது—ப,நி,ஸ, அனுமதிக்கப்பட

வில்லை" என்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது, (ஜூலை 1930, வால்யூம் 1, நம்பர் 3, பக்கம் 230, ம்யூஸிக் அகாடமி ஜர்னல்), ஒன்பது வருஷங்களுக்குப் பிறகு, முன் செய்த தீர்மானத்தைத் திருத்தி மறுபடியும் தீர்மானம் செய்யவேண்டிய அவச்யம் என்ன? சென்ற ஒன்பது வருஷங்களில் வித்வான்கள், ஆனந்த பைரவி ராகத்தில் செய்த ஆராய்ச்சியின் பயனா இது? இல்லவே இல்லை. ஸ்ரீ. டி. வி. சுப்பராவ் சொல்லியபடி இந்த ராகத்தில் "சாஸ்த்திரீயம் (Classical) ஜனரஞ்சகம் (Popular) என்று இரு வகைகள் (Phases) உண்டு. சாஸ்திர ஸம்பிரதாயப்படி, இந்த ராகத்தில், அந்தர காந்தாரமும், காகலி நிஷாதமும் கிடையாது." (ஹிந்து, டிஸம்பர் 23-ஆம் தேதி 1939). ஜனரஞ்சனத்தை உத்தேசித்து, ராகங்களில், ராகபாவத்தை மாற்றுமல், புதியஸ்வரங்களை நுழைப்பதை வித்வான்கள் கையாண்டிருக்கிறார்கள். இம்மாதிரி, அநேக ராகங்களில் அந்யஸ்வரங்கள் அநேகம் இருக்கின்றன. அதில் ஒரு தவறுதலும் இல்லை என்பதற்கு அத்தாட்சியாக, வித்வான்கள், ஆனந்தபைரவி ராகஸ்வரங்களை, இம்மாதிரி முடிவுசெய்து, "முசிரியின் பல்டியை"யும், அதற்கு உதவின. "பத்திரிகைகளின் பக்க பலத்தை"யும், வீணுக்கிவிட்டார்கள். இந்த முடிவிலிருந்து இம்மாதிரியான சங்கீத மஹாநாடுகளால் சங்கீதம் முன்னேறி வருகிறது என்றுத்தயக்கமின்றிச் சொல்லலாம்.

சாதாரணமாய் மஹாநாடுகள் நடத்துவது மிகவும் கஷ்டம். அதிலும் சங்கீத வித்வான்களைக் கூட்டி ஒரு மஹாநாடு நடத்துவது மிகவும் கடினம். "எங்கள் பரம்பரை வழி, எங்கள் பாடம்" என்று "தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்று சாதிக்கும் குணமுள்ள வித்வான்களைக் கூட்டி, அனுவச்யமான மனஸ்தாபம், சச்சரவு முதலியவைகள் ஏற்படாமல், மிகவும் நன்றாய் இதுவரை மஹாநாடுகளை நடத்தி, ஸ்ரீ. கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் தன் திறமையைக் காட்டியிருக்கிறார். வித்வான்கள் மஹாநாடு போல், "சங்கீத ரஸிகர்" மஹாநாடு ஒன்றும் நடத்திப் பொதுஜன அபிப்பிராயத்தை அறிந்து, அதன் முடிவை வித்வத் சபையின் ஆராய்ச்சிகளில் உபயோகித்தால், சங்கீதம் சுலபமாக முன்னேறும். மஹாநாடுகள் கூட்டும் விஷயத்தில் அனுபவமும் திறமையும் பெற்ற ஸ்ரீ. கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யருக்கு, இது ஒரு கடினமான காரியம் அல்ல. ஆகையால் இம்மாதிரியான "சங்கீத ரஸிகர் மஹாநாடு" ஒன்றை இவ்வருஷம் ஸ்ரீ. அய்யர் ஏற்பாடுசெய்து சங்கீதத்தொண்டு செய்வாரென்று நான் திடமாக நம்புகிறேன்.

(தொடரும்)

ஒலிப் பேய்

(ர. வேங்கட்டராமன்)

1

"வைத்தியரே, வைத்தியரே" என்று சத்தம் கேட்டது.

நள்ளிரவில் தூக்கத்திலிருந்து திடுக்கிட்டெழுந்து கண்ணைத் திறந்து பார்த்தால், எங்கள் ஊர் பெரிய பண்ணை ராதாகிருஷ்ணய்யர் வந்து நிற்கிறார். அவசரத்துடன் எழுந்து ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டு அவரை உட்காரச் செய்தேன். அவர் முகத்தைக் கவலையுடன் நோக்கினேன். பின்பு கடியாரத்தைப் பார்த்தேன். மணி மூன்று.

ராதாகிருஷ்ணய்யர் முகம் வெளிறிப் போயிருந்தது. கண்ணைப் பரக்கப் பரக்க விழித்தார். என்னைப் பார்த்து, "வைத்தியரே, நேற்றிரவு அந்த உபத்திரவங்கள் மறுபடியும் வந்தன. உங்கள் மருந்து ஸாரமற்றது" என்றார். நான் சிறிது சங்கோஜத்துடன் "மதுபானம் செய்வீரோ?" என்று கேட்டேன். அவருக்குக் கோபம் பொங்கி வந்துவிட்டது. "இல்லை. இல்லை. குடிகாரணமில்லை. உண்மையான காரணம் தெரியவேண்டுமானால் கதையை கவனித்து ஆதியிலிருந்து கேளும்" என்றார்.

சுவரிலே மாட்டப்பட்டிருந்த விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. அதை நான் சற்றே பெரிதாக்கினேன். ஒளி கொஞ்சம் மிகுதியாயிற்று. ஆனால் புகை படர்ந்தது.

வேஷ்டியை தோள்மேலே இழுத்துவிட்டுக்கொண்டு, ஒரு ஜாதிக்காய் பெட்டியின் மேலே பத்திரிகையை விரித்து உட்கார்ந்தேன். ராதாகிருஷ்ணய்யர் தன் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

"மூன்று வருஷங்களுக்கு முன்பு எனக்குப் பிரமாதமான வியாதியொன்று வந்தது. என் உடம்பு மெலிந்து நான் சாகப்போகிற சமயத்தில் பிழைத்துக் கொண்டுவிட்டேன். அதன்பிறகு ஒரு மாதத்திற்கப்பால் சொஸ்த நிலைக்கு வந்தேன். அந்த வியாதி பல மாதங்களிருந்தது. அந்த பல மாதங்களாக என் பத்தினி எனக்குச் செய்த சிசுருஷைக்குக் கணக்கில்லை. இரவும் பகலும் ஒரு க்ஷணங்கூட இளைப்பாறவில்லை. உணவையும் மறந்தாள்; தூயிலையும் துறந்தாள்—உலகத்தில் மற்றெதையுமே மறந்துவிட்டாள். அந்த அபலை யமனுடைய தூதரை எங்கள் வீட்டிலிருந்து துரத்துவதிலே தனது சக்தி முழுவதும் செலுத்திப் போராடினாள்.

"என் மனைவியினுடைய சக்திக்கு ஆற்றாது, எமன், கையிலிருந்த இரையைப் பறிகொடுத்த புலி போலவே, என்னைத் தன் வாயிலிருந்து கக்கிவிட்டுப் போகையில் என் மனைவியை ஒரு அறை அறைந்துவிட்டுச் சென்றான்.

"அப்போது என் மனைவி கர்ப்பமாக இருந்தாள். சிறிது காலத்துக்கப்பால் குழந்தை செத்து விழுந்தது. அப்போது நான் அவளுக்குச் சிகித்ஸை உபசாரங்கள் பண்ணும்படி நேரிட்டது. இது அவளுக்கொரு கஷ்டம். 'என் அறையிலே இத்தனை அல்லோலகல்லோலம் நடத்தவேண்டாம்' என்பாள். அவளுக்கு ஜ்வரம் வந்தது. அப்போது நான் இரவில் அவளறைக்குப் போய், எனக்கு விசிறிக்கொள்வதுபோல் அவளுக்கும் சற்று விசிறுவேன். அவளுக்குக் கோபம் வரும். ஏதாவது சாக்குச் சொல்லி அழுவாள். அவளுக்கு ஏதேனும் கொஞ்சம் சகாயம் செய்யப்போனால் அதில் வருத்தந்தானுண்டாகும். 'புருஷர்கள் தன் மனதை இப்படிச் சிதற விடலாமோ?' என்பாள்.

"வைத்தியரே! நீர் என் தோட்டத்து பங்களாவைப் பார்த்திருக்கிறீரல்லவா?"

அதற்கெதிரே, தோட்டத்தின் அடிப் புறத்தில் காவிரி ஓடுகிறுள். தென்புறத் தில், என் மனைவி, எங்கள் படுக்கை யறைக்குக் கீழ் ஒரு சிறியதோர் தோட் டம் போட்டு தனக்கிஷ்டமான புஷ்பச் செடிகளை வைத்திருந்தாள். அதைச் சுற் றிலும் மருதாணி வேலி போட்டிருந் தது. மல்லிகை, சூரியகாந்தி, நந்தியா வட்டையும் பலவித ரோஜாக்களும் அங் கிருந்தன. ஒரு பெரிய மரத்தடியில் பளிங்கு கற்கள் போட்டு, அதன்மேல், என் மனைவி சௌக்கியமாய் இருந்த காலத்தில், குளிப்பது வழக்கம். கோடை யில் மாலை நேரங்களில் தன் காரியம் முடிந்தபின் அதில் வந்து வீற்றிருப் பாள். அங்கிருந்து பார்த்தால் அவ ளுக்கு நதி தெரியும். நதியில் கோடை யில்தான் பிரவாகம் அதிகரிக்கும். அப் போது படகுகளின்மேல் போவார் வரு வார் கண்ணுக்கு அவள் முகம் தென் படாமலுமிருக்கும்.

“சித்திரை மாதத்தில் ஒரு மாலையில், பூர்ணசந்திரன் உதயமாகி சற்று நேரம் ஆகியிருந்தது. மேற்கே இருட்ட இருட்ட, நிலவு வெண்ணிறம் பெற்றுப் பிரகாசித்தது, அம்மனோகரமான சம யத்தில், அவள் நெடுங்காலமாகத் தன் அடைப்பான அறைக்குள்ளிருந்து வெளி யேறுமலே கிடந்தவளாகையால், வெளியே தனது தோட்டத்திலே போய் உட்கார அபேக்ஷையிருப்பதாகக் கூறி னுள்.

“நான் வெகு ஸாவதானமாக அவளைத் தூக்கி மகிழமரத்தடியிலிருந்த அந்த சலவைக்கல் மேலே கொண்டு வைத் தேன். ஓரிரண்டு மகிழம் பூக்கள் கீழே சிந்தின. மேலே மரக்கிளைகளினிடை வெளிவழியாக நிலா அவளுடைய அழ கிய முகத்தில் சிதறி வீசிற்று. சூழ்ந்த பொருளெல்லாம் மௌனமாயிருந்தன. மலர்களின் வாஸனை மிகுதிக்கிடையே அந்த இருண்ட நிழலில் அவளுடைய பக்கத்திலிருந்துகொண்டு நான் அவள் முகத்தைப் பார்த்தபோது என் கண் ணில் ஜலம் ததும்பிற்று.

“மெதுவாக அவளருகே நெருங்கி அவளுடைய வற்றிய, சூடான கரத்தை என் கையினுல் பற்றினேன். அவள் வேண்டாமென்று சொல்லவில்லை. இங் ஙனம் மௌனமாகச் சிறிது நேரம் இருந்தபின் என் இருதயம் இளகி நான், ‘கண்ணே உனதன்பை எக்காலத்திலும் மறக்கமாட்டேன்’ என்றேன்.

“இதைக் கேட்டவுடன் என் மனைவியி னுடைய முகத்தில் இதழ்கள் விரிந்து குறுநகை ஏற்பட்டது. அந்த குறுநகை இளஞ்சிரிப்பாயிற்று. பின்னர், அந்த தோட்டப் பிரதேசமெல்லாம் எதி ரொலி செய்யும்படி கலகலவென்று ஒரு சிரிப்பு சிரித்தாள். அந்த சிரிப்பில் கொஞ்சம் சந்தோஷம், கொஞ்சம் அவ நம்பிக்கை, கூரிய பரிகாசம் கொஞ்சம்— இவை மூன்றும் கலந்திருந்தன. வாயி னுல் பதில் சொல்லாமலே தன்னை மறக்க மாட்டேனென்று நான் சொல்லியதைத் தான் நம்பவில்லை யென்றும் சிரிப்பினுல் அறிவித்தாள்.

“அவளுடைய, கூர்மையான இனிய சிரிப்புக்கு அஞ்சியே என் மனைவியுடன் காதல் வார்த்தை பேச எனக்கு எப் போதும் தைரியம் ஏற்படாதிருந்தது. ஆகவே, நான் சும்மா இருக்க நேரிட்டது. நிலாவின் ஒளி அதிகரித்தது. அங் கொரு குயில் வந்து ‘குஹூ, குஹூ’ என்று பித்துக்கொண்டது போல் கூவிற்று. இதை நான் மௌனத்துடன் கேட்டு, ‘அட, இத்தனை ரமணீகரமான இரவில் இந்தக் குயிலுடைய பேடு அதன் மேல் இரங்காதிருப்பது வியப்பன்றே?’ என்று சிந்தித்தேன்.

“நெடுங்காலமாக வைத்தியம் செய்து பார்த்தேன். என் மனைவியின் நோய் தீரவில்லை. தேசாந்தரக் காற்றுப் பட் டால் நல்லதென்று வைத்தியர் சொன் னுர்.”

“நான் அவளைக் கூட்டிக்கொண்டு கூனூருக்குப் போனேன்.” என்றுர். அப்போது மங்கலாக ‘படக் படக்’ கென்று புடைத்துக்கொண்டிருந்த மண் ணெண்ணெய் விளக்கை நான் சற்று

பெரிதாக்கினேன். இரவின் மௌனத்தில் கொசுவின் சத்தம் "ஙொய்" என்று கேட்டது.

2

"வெயிலின் அருமை குளிரில் தெரியும் என்ற பழமொழியின் உண்மையை அம் மலை நாட்டில் நன்கு தெரிந்து கொள்ளலாம். அப்போது அங்கு வானத்தை மேகமும் மூடுபனியும் மறைத்திருந்தன. அவ்வித நேரத்தில் வெளியே உலாவுதல் கஷ்டமாகத்தான் தோன்றும். ஆனால் வீட்டுக்குள் இருப்பது அதனினும் கஷ்டம்! ஆகையால் நானும் என் மனைவியும் காப்பி சாப்பிட்டுவிட்டு 'பூட்ஸு'ம் 'ஓவர் கோட்'டும் தரித்துக்கொண்டு தினம்போல் உலாவப் புறப்பட்டோம்.

"இடையிடையே, தூற்றல் போட்டு நின்றசமயம். மூடுபனியில் மறைந்த குன்றுகளைப் பார்த்தால், சித்திரக்காரன் எழுதிப் பின் அழிக்க முயற்சி செய்துகொண்டிருந்த படம்போலே தோன்றிற்று. அந்த மூடுபனியான மேகலோகம் மனுஷ்ய வாஸத்துக்கு தகுந்ததாகத் தோன்றவில்லை. திடீரென்று என் மனைவி கால் வலிக்கிறதென்றும், தலை வலிக்கிறதென்றும் கூறவே, நான் அவளுடன் வீட்டிற்குத் திரும்பினேன்.

"கூனூரில்,வைத்தியநாதய்யர் என்பவர் என் மனைவிக்கு வைத்தியம் பண்ணினார். சிறிதுகாலத்திற்குப் பின் அது தீராத நோயென்றும், அவள் சாகும்வரை கஷ்டப்படத்தான் வேண்டுமென்றும் சொல்லிவிட்டார். இதைக் கேட்டவுடன் என் ஹ்ருதயம் வெடித்துவிடும் போலிருந்தது. எனினும் நான் தைரியத்தை இழக்கவில்லை. இது வெறும் பேத்தலென்று நினைத்து சும்மா இருந்துவிட்டேன்.

"ஒரு நாள் என் மனைவி என்னிடம் கூறுகிறாள்: 'நோய் என்னை விடப் போவதில்லை. சாவேனும் விரைவில் வருமென்று தோன்றவில்லை. இந்த ஜீவப் பிரேதத்தை வைத்துக்கொண்டு நீங்கள் எத்தனை காலம் கஷ்டப்படுவது? என்னை விட்டுவிட்டு வேறேதேனும் செய்யுங்கள். போங்கள்' என்றாள்.

"நான் சிரிக்க வேண்டிய முறை வந்தது. ஆனால் எனக்கு அவளைப்போல் சிரிக்கும் சக்தி கிடையாது. கதைகளில் கதாநாயகர்கள்சொல்லுகிறபடி நான் அவளைப் பார்த்து, 'என் உடம்பில் உயிர்கிற்கும் வரை.........' என்று வாக்கியத்தைத் தொடங்குவதற்குள் அவள், 'சரி, சரி மேலே சொல்லவேண்டாம்! உங்கள் வார்த்தையைக் கேட்கும்போது எனக்குச் சாகவிருப்பமுண்டாகிறது' என்று சொன்னாள்.

"ஆனால் அப்போது எனக்கு ஒரு விஷயமும் நேரே தெளிவாகத் தெரியவில்லை. இப்போது நினைத்துப் பார்க்கும்போது தோன்றுகிறது. ஏற்கனவே இந்தத் தீரா நோய் கொண்டவளுக்கு ஸேவை பண்ணுவதில் என் உள்ளத்திலே அலுப்புண்டாய்விட்டது.

"நான் எத்தனை பக்தி விசுவாசத்துடன் உபசாரங்கள் செய்தாலும், என் அந்தரங்க ஆபாஸம் கண்ணுக்கு புலப்படாதிருக்கவில்லை. கலப்பெழுத்துக்கள் போடாத முதற்பாட புஸ்தகத்தைப் படிப்பதுபோல் அத்தனை சுலபமாக என் ஹ்ருதயத்தை வாசிக்கும் சக்தி அவளுக்கிருந்ததென நான் அப்போதறியவில்லை. இப்போதறிகிறேன்.

"வைத்தியர் வைத்தியநாதய்யரும் நானும் ஒரே ஜாதி. அவர் வீட்டுக்கு நான் அடிக்கடி போவது வழக்கம். அங்கே அவர் என்னை தன்னுடைய மகளுக்கு அறிமுகப்படுத்தினார். அவளுக்கு பதினாறு வயதுக்கு மேலாய்விட்டது. ஆனால் விவாகமாகவில்லை. அவள் நல்ல புத்திசாலி. அதற்குத் தகுந்தபடி அழகும்கூட. இந்த காரணத்தால் நான் அவளுடன் எல்லாவிதமான விவகாரங்களைப் பற்றியும் அடிக்கடி வாதிப்பதுண்டு. இரவு நெடு நேரம் அவளுடன் பேசிக்கொண்டிருப்பேன். நான் வீட்டுக்குப் போகையில் நிசியாய் விடும். மனைவிக்கு மருந்து கொடுக்கும் காலமும் தவறிவிடும். வைத்தியர் வீட்டுக்குத்தான்

நான் சென்றிருந்தே னென்று அவளுக்குத் தெரியும். அப்படி யிருந்தும் என் இத்தனை தாமஸமென்று, ஒருதரம்கூட அவள் என்னைக் கேட்டது கிடையாது.

"வியாதியறை எனக்கு சந்தோஷக் குறைவாயும், சகிக்க முடியாததாயும் காணப்பட்டது. நோய்கொண்ட மனைவியை அலக்ஷியம் பண்ணலானேன். மருந்து கொடுக்கும் சமயம் அடிக்கடி தவறலாயிற்று.

"சில சமயத்தில் வைத்தியர் என்னிடம், 'தீரா நோயுடையோருக்கு மரணம் இனிய விடுதலை. உயிருள்ளவரை அவர்களுக்கின்பமில்லை. அவர்களாலே பிறருக்குத் துன்பம்' என்பார்.

"சாதாரண சமயத்தில் இந்த வார்த்தை சொன்னால் பெரிதில்லை. என் பத்தினி இருந்த நிலைமையில் இந்த வார்த்தையை அவர் உச்சரித்திருக்கவே கூடாது. ஆனால் உயிர், மரண விஷயங்களைப்பற்றி வைத்தியர்களின் மனம் கல்லாய் விடுவது இயல்பே போலும்!

"ஒருநாள் வைத்தியர் மகளாகிய சுசிலா என் மனைவியை நேரே பார்க்க வேண்டுமென்று சொன்னாள். யாது காரணம் பற்றியோ இந்த யோசனை எனக்கு சம்மதப்படவில்லை. இருந்தாலும், அவளைக் காட்டமாட்டேனென்று சொல்ல சரியான காரணமொன்றும் கிடைக்கவில்லை. எனவே ஒருநாள் மாலை சுசிலா எங்கள் வீட்டுக்கு வந்தாள்.

"மணி சுமார் மூன்று இருக்கும். அன்று என் மனைவிக்கு நோய் அதிகக் கொடுமையாய் இருந்தது. வலி பொறுக்கமுடியாத சமயத்தில் என் கையை கெட்டியாகப் பிடித்துக் கொள்வாள். அதிலிருந்துதான் அவள் படும்வேதனையை நான் தெரிந்து கொள்ள முடியும். என் மனைவியின் நோய் கொஞ்சம் குறைவுபடும் சமயங்களில் பெருமூச்சுடன் 'அப்பாடா' என்று சொல்லுவாள்.

"அந்த நேரத்தில் சுசிலா வந்து கதவருகே நின்றாள். எதிர்புறத்திலிருந்து ஜன்னல் வழியாக சூரியனின் ஒளி வந்து அவள் முகத்தில் விழுந்தது. என் மனைவியின் உடம்பு நடுங்கிற்று. என் கையை இறுகப் பிடித்துக் கொண்டு 'அவள் யார்?' என்று கேட்டாள். முதலிலே நான் 'எனக்குத் தெரியாது' என்றேன். அடுத்தக்ஷணம் என் மனதின் மேலே சவுக்கடி விழுந்ததுபோ லிருந்தது. உடனே நான் என்னைத் திருத்திக் கொண்டு, 'அவள் நமது வைத்தியர் மகள் சுசிலா' என்றேன். என் மனைவி என்னை நோக்கி ஒரு பார்வை பார்த்தாள். அதில் பல பொருள்கள் காணப்பட்டன. பிறகு அவள் சுசிலாவை நோக்கி, 'வா' என்று கூறி, 'என்னிடம் வைத்தியரை அழைத்துக் கொண்டு வாருங்கள்' என்றாள்.

"சுசிலா அறைக்குள் வந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். நான் வைத்தியரைக் கூப்பிடுவதற்காக வாயிலை அடைந்ததும் வைத்தியரே வந்து விட்டார். வைத்தியர், கையில் இருசீசாவில் மருந்து கொண்டு வந்திருந்தார். அவற்றை என் மனைவியிடம் காட்டி, 'அம்மா இந்த வெள்ளை சீசா மருந்து உள்ளுக்குச் சாப்பிட. இந்த நீல சீசாமருந்து வெளிக்கித் தடவ. இந்த மருந்து கொடுமையான விஷம். ஜாக்ரதை! கலந்து விடாதீர்கள்!' என்று எச்சரிக்கை செய்துவிட்டு தன் மகளுடன் கிளம்பினார். அதற்குள் என் மனைவி அவரை நோக்கி, 'வைத்தியரே, இவரையும் சற்று காற்று வாங்க அழைத்துப்போம்' என்றாள்.

"வைத்தியர், 'வாருங்காணும். சற்று உலாவி வரலாம்' என்றார். கொஞ்சம் சம்மதமில்லாதவன் போல் பாசாங்கு செய்துவிட்டு, நானும் புறப்பட்டேன். வைத்தியர் மருந்து சீசா விஷயமாக என் மனைவிக்கு மறுபடியும் எச்சரிக்கை செய்தார்.

"அன்றிரவு, நான் வைத்தியர் வீட்டிலேயே போஜனம் பண்ணிவிட்டு வீட்டுக்கு கிளம்பும் சமயம். அப்போது மணி எழடித்து விட்டது. என் வீட்டை நோக்கிக் கிளம்பி விட்டேன். அன்று வானம் இருண்டிருந்ததால் மழைக்குப் பயந்து சற்று வேகமாக நடந்தேன்.

திடீரென்று புயல் போல் காற்று அடித்தது. சாலையின் இருபுறத்திலுமுள்ள மரங்கள் அப்போது பட்டபாட்டைச் சொல்லி முடியாது. திடீரென்று திக்குத்திகந்தமும் பற்றி எரிகிறமாதிரி பளிச்சென்று ஒரு மின்னல் அடித்தது. உடனே வானுலகு பிளவுபட்டதுபோல் பேரிடி ஒன்று முழங்கிற்று. அடுத்த நிமிஷம் மழை சடசடவென்று கொட்ட ஆரம்பித்தது. நான் மழையில் நனைந்துகொண்டே வீட்டை நோக்கி ஓடினேன். நோயாளி அறைக்குச் சென்று, 'கௌரி, கௌரி' என்று என் மனைவியைக் கூப்பிட்டேன். அவளருகிற் சென்றேன். அப்போது அவள் தன் கண்களை மலர விழித்தாள். அவள் என்னைக் கையால் தொட்டாள். உடனே அந்த ஸ்பரிசம் அவள் எண்ணங்களை வெளியிட்டது. அது என்னிடம், 'வருந்தாதே. இவை எல்லாம் நன்மைக்கே! நீ அவளுடன் சேர்ந்து சந்தோஷத்துடன் வாழ். அதையறிந்து நான் சந்தோஷத்துடன் சாகிறேன்!' என்றது. ஒரு நிமிஷம் பித்துப் பிடித்தவன் போல் நின்றேன். அடுத்தக்ஷணம் பிரமை நீங்கி நீல சிசா மருந்தை அவளுக்குத் தடவ எடுத்தேன். அது காலியாக இருந்தது. நான் மிகவும் படபடப்புடன், 'ஐயையோ! தவறாக நீல சிசாமருந்தைக் குடித்து விட்டாயே' என்றலறினேன். உடனே வைத்தியருக்குச் சொல்லியனுப்பினேன்.

"வைத்தியர் திரும்பி வருமுன் மனைவியின் நோவெல்லாம் தீர்ந்து விட்டது. அவள் செத்துப்போய் விட்டாள்......" இவ்வாறு கூறி அவர் கண்ணீர் வடித்தார்.

3

அவருக்கு மேலே சொல்ல சம்மதமில்லை. எனினும் அவரை மீறிய மந்திர சக்தி போன்றதொரு சக்தி வலிய வந்து அவரைச் சொல்லும்படி செய்தது.

"நான் சுசீலாவை மணம் செய்து கொண்டேன். இவளுடன் நான் பிரியமாகப் பேசத் தொடங்கினேன். ஆனால் இவள் விசனப்படுபவள் போல் ஒரு பார்வை பார்த்தாள். இவளுடைய விசனத்தின் காரணம் எனக்குத் தெரியவில்லை.

"இந்த சமயத்திலேதான் நான், குடிக்கும் வழக்கத்தைக் கைக்கொள்ளத் தொடங்கினேன். இலையுதிர் காலத்தின் ஆரம்பத்தில் ஒரு நாள் சுசீலாவுடன் மாலை நேரத்தில் நதியோரமாக எங்கள் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தேன். இருளினால் உலகம் பேயுலகமாகத் தோன்றிற்று. பறவைகள் உறங்கினபடியால் அவை சிறகை அசைக்கும் ஒலிகூட இல்லை. நான் நடந்த பாதையின் இருபுறத்திலும் சவுக்குமரத்தின் உச்சிக் கிளைகள் தென்றலில் அசைந்து கொண்டிருந்தன.

"ஆயாஸத்தால் சுசீலா போய் அந்தப் பளிங்குக் கல்மேல் படுத்தாள். கையை தலைக்கு உயரமாக வைத்திருந்தாள். நான் அருகிற் சென்றேன். இருள் அங்கே அடர்த்தியாக இருந்தது. வானத்தில் ஒரு கோணம் எங்கள் விழியில் பட்டது. அதில் நட்சத்திரங்கள் சிதறிக் கிடந்தன. மது மயக்கத்தால் சிள் வண்டுகள் புஷ்பத்துள் மயங்கிக்கிடந்தன.

"அன்று மாலையில் நான் கொஞ்சம் மதுபானம் செய்திருந்தேன். என் உள்ளம் இளக்க வழியில் இருந்தது. கண் இருளில் சற்று பழகிய பின்பு, சுசீலாவின் சுந்தரரூபத்தை, மரத்தின் நிழலில் காணும்போது என் ஹ்ருதயத்தில் வர்ணிக்க அரியதான ஒருவித வேட்கையை விளைவித்தது. என் கைகளினால் தழுவப்பட முடியாத ஒரு கனவு ரூபம்போலே அவள் என் விழிக்குப் புலப்பட்டாள். என் மனதில் தோற்றிய காதல் வார்த்தையை அடக்கமுடியவில்லை. அவளை அருகே இழுத்து, அவள் கரத்தைக் கைப்பற்றி, 'சுசீலா, நீ நம்புவாயோ, எப்படியோ, ஆனால் நான் உனது காதலை எப்போதும் மறக்கமாட்டேன்' என்றேன்.

"இந்த சொற்கள் என் வாயினின்றும் வெளியுற்ற கணத்திலேயே, என் உடம்பு திடுக்கிட்டது. எனக்கு ஞாபகம் வந்து விட்டது. முதல் மனைவியினிடம் நான்

அதே வாக்கியத்தை அப்படியே சொல்லி நெடுங் காலமாகவில்லை. அந்த நினைப்பு வந்துவிட்டது. அதே க்ஷணத்தில், சவுக்கு மரங்களின் தலையிலும், இருண்ட வானுலகிலும், காவிரியின் விஸ்தீரண முழுதிலும் பரவிச் செல்வதாய் 'ஹாஹா, ஹாஹா, ஹா ஹா' என்றொரு சிரிப் பொலி என் தலைக்குமேலே கடந்து சென்றது. அது நெஞ்சையுடைக்கும் நகைப்பா, வானினையுடைக்குமோரழு கைக் குரலா, என்று தெளிவாகத் தெரிய வில்லை. அதைக் கேட்டதும் நான் பயந்து விட்டேன். நான் பயத்தினின்று விடு பட எண்ணி சுசீலாவுடன் எழுந்து படுக்கைக்குச் சென்றேன். சிறிது நேரத் தில் சுசிலா தூங்கிவிட்டாள். ஆனல் நான் மட்டும் தூங்கவில்லை.

"இருளில் ஒரு நீண்ட வற்றிய விரல் தூங்குகிற சுசீலாவைச் சுட்டிக்காட்டு வது போலிருந்தது. 'ஹாஹா, ஹாஹா, ஹா ஹா' என்று சத்தம் கேட்பது போலே எனக்குத் தென்படலாயிற்று.

"விரைவாக எழுந்து, ஒரு தீப்பெட் டியை எடுத்து விளக்கேற்றினேன். நான் அங்ஙனம் செய்து கொண்டிருக்கும் போது கொசுவலை காற்றில் ஆடியது. ஆந்தைபொன்று அலறும் சப்தம் கேட் டது. எனக்குள்ளே இரத்தம் உறைந்து போக, என் நெற்றியிலே வியர்வை துளும்ப அக்கோரமான இருட்டில் 'ஹா ஹா ஹாஹா, ஹா ஹா' என்ற நகைப்பின் ஒலி பரந்துவந்தது. நதியின்மீதும், அப் பால் மணல் மேடுகளின் மீதும், அப்பால் உறங்கின வயல்களின்மீதும், கிராமங் களின் மீதும், நகரங்களின் மீதும், அவ் வொலி கடந்து, இந்த லோகத்திலும் பர லோகத்திலும் யாத்திரை செய்வது போல் தோன்றிற்று. அவ்வொலி தேய்ந்துகொண்டே திசை வெளியில் சென்று சென்று கடைசியாக ஊசி முனை போலாயிற்று. இவ்வளவு தீக்ஷணமான தேய்ந்த ஒலியை நான் கேட்டதே கிடை யாது. இப்படி ஒரு ஒலிப் பேய் உண் டென்று நான் கற்பனையிலும் கருதிய தில்லை. என் மண்டைக்குள்ளேயே அனந்தமான திசைவெளி இருப்பது போலே தோன்றிற்று. எனவே அவ் வொலி எத்தனை தூரம் போயும் என் மூளையை விட்டகலவில்லை. கடைசியாக இது பொறுக்கமாட்டாமல், விளக்கை அவித்தாலொழிய தூக்கம் வராதென்று நினைத்தேன்.

"விளக்கை அவித்துவிட்டு ஜன்னல் கதவைச் சாத்தப் போனேன். தற் செயலாக வானத்தைப் பார்த்தேன். அப் போது வானத்தைக் கரிய மேகங்கள் சூழ்ந்துகொண்டிருந்தன. இரவின் இருள் இன்னும் மையாகிவிட்டது. ஏதோ பெரிய ஸம்பவம் நடக்கப்போவதை உல கம் எதிர்பார்த்து நிற்பதுபோல் மௌ னம் இயன்றது. தவளை கத்துவதன் ஏக ராகமும், சிள் வண்டுகள் ஒலிப்பதன் சப்தமும் அந்த மௌனத்தைக் கலைக்கவில்லை. அதனை விகாரமாக்கின. நான் கதவைச் சாத்தியதும் மறுபடியும் என் கொசுவலைக்கருகில் அவ்வொலி, 'ஹா ஹா, ஹாஹா, ஹா ஹா' என்று கேட்டது. என் நெஞ்சு அதற்குத் தாளம் போட் டது. சிறிது நேரத்தில் என் ஹ்ருதய மும் 'ஹாஹா, ஹாஹா, ஹா ஹா,' என்று உச்சரிக்கத் தொடங்கியது......"

இங்ஙனம் ராதாகிருஷ்ணய்யர் பேசி வருகையில் அவர் முகம் பயங்கரமாகக் காணப்பட்டது. அவர்குரலடைபட்டது. நான் அவர் தோளைத் தொட்டு "கொஞ் சம் ஜலம் சாப்பிடும்" என்றேன். அந்த க்ஷணத்தில் மண்ணெண்ணெய் விளக்கு அவிந்தது. ஜன்னலுக்கு வெளியே உதய ஒளி தோன்றிவிட்டது. ஒரு காகம் கரைந்தது. மஞ்சள் நிறச் சம்மட்டி ஒன்று இசைந்தது. வீதியில் என் வீட் டுக்கெதிரே ஒரு காளை பூட்டிய வண்டி கிறிச்சிட்டுக்கொண்டு போயிற்று. ராதா கிருஷ்ணய்யர் முகம் மாறுபட்டது. இர வின் மாயையாலும், கள் மயக்கத்திலுண் டான சக்தியினலும் அவர் தன்னுடைய வாழ்க்கைக் கதையைச் சொல்லிவிட்டது பற்றி வெட்கமும், கோபமும், அடைந் தவராய் 'போய் வருகிறேன்' என்று கூடச் சொல்லிக்கொள்ளாமல் எழுந்து வெளியே பாய்ந்து சென்றார்.

(வங்காளக் கதையைத் தழுவியது)

சாதக பக்ஷி

(க. ரு. ராமய்யா)

நதிகளில் பரிசுத்தமான அமிர்தம் போன்ற திவ்ய ஜலம், கரைபுரண்டு கலகலவென சப்தமிட்டு வெள்ளமாக ஓடிக்கொண்டிருந்தாலும், ஏரிகளிலும் குளங்களிலும் அளவு கடந்த ஜலம் தேங்கிக் கிடந்தாலும், மஹா சமுத்திரம் பிரளயமெடுத்தாலும், சாதக பக்ஷிக்கு இவற்றினால் ஏதாவது பலனுண்டா? கிடையவே கிடையாது. அதற்கு அடங்காத் தாகமுண்டு. ஆனால் இம் மண்ணுலக நீர் அதன் தாகத்தை அடக்காது. அதுவும் இந்நீரை எதிர்பார்ப்பதில்லை. அது ஆகாயத்தை நோக்கி உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அங்கிருந்து திவ்யமான ஜலம் தாரையாய்ப் பொழியவேண்டும். அந்த தாரை சாதகப் பக்ஷியின் மேல் நோக்கிகொண்டிருக்கும் கண்டத்தில் விழுந்தால் அது சாந்தியடைய முடியும்.

உண்மையில் இவ்வுலகம் ஜலத்தால் சூழப்பட்டிருக்கிறது. எங்கும் சுலபமாக குடிதண்ணீர் கிடைக்கும். இனிமையிலும் இனிமையாய் குளிர்ச்சியிலும் குளிர்ச்சியாய் நீர் அருவிகளும், ஏரிகளும் நதிகளுமிருக்கின்றன. ஆனால் இவை எல்லாம் குடிக்க உபயோகமற்றது என்று அப்பக்ஷி வெகு தெளிவாக அறிந்திருக்கிறது. உலகத்தின் மற்ற பிராணிகள் மனங்கொண்ட வரையில் குடிக்கவே இந்நீர்த் துறைகளிருக்கின்றன. ஆனால் சாதகபக்ஷி இவற்றினிடத்திலிருந்து தூர விலகியிருக்கும். இவை அதற்கு பிடிப்பதில்லை. உயிர்போனாலும் அது இவற்றைத் தொடுவதில்லை. தாகத்தோடிருப்பது கஷ்டமல்ல. தியாகம் செய்ததை மறுபடி தொடுவதோ, ஏற்பதோ பெருங் கஷ்டம். முடியவும் முடியாது. அவசியம் நேரிட்டால் எப்பொழுதாவது சுவர்க்கத்தின் அமிர்த நீர் விழுந்து சாதகபக்ஷியின் கண்டம் நனைந்து தாகம் தணியும். உண்மையில் விரதம் மகா கஷ்டம். கண்முன் ஓடும் ஜலத்தைப் பார்த்துக் கொண்டே தாகத்தோடிருப்பது அதிலும் மிக்க கஷ்டம். யாரால் முடியும்?

இங்கே பாரதியார் "வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்றும் கொள்வாரோ? என்றும்—ஆரமுதுண்ணுதற்காசை கொண்டார்கண்ணில் அறிவைச் செலுத்துவாரோ?" என்று கர்ஜித்த கோஷம் நெஞ்சில் உரமேற்றுகிறது. நரம்பில் முறிக்கேற்றுகிறது. "பெற்றால் சாதகபக்ஷி போல் அமிர்தம் போன்ற சுதந்திரம் பெறுவோம். இல்லையேல் மடிவோம்" என்று ஹ்ருதயம் துடிக்கிறது. சகோதரர்களே! நாம் எத்தகையவர்கள்? லக்ஷ்மிகடாட்சமற்றவர்கள், அதிர்ஷ்ட வீனர்கள், விவேகத்தை அறவே இழந்தவர்கள்; மிதித்து ஒடுக்கப்பட்டவர்கள்; நித்திய பட்டினிக்காரர்கள்; நம்முள் சண்டையிட்டுக்கொள்பவர்கள்; அஞ்ஞையுடையவர்கள்; வறுமை அறியாமை என்னும் படுகுழியில் அகப்பட்டு நாளுக்கு நாள் அமிழ்ந்து வருபவர்கள். கோடிக்கணக்கான இத்தகைய தேச மக்களுக்காக இந்நாட்டிலே பிறந்த விசால இதயம் படைத்த ஸ்திரீ புருஷர்கள் நூற்றுக்கணக்கானவர் தங்கள் சுகபோக ஆசைகளையெல்லாம் மறந்து பாடுபடுவதற்கு எப்போது முன்வருகிறார்களோ அப்போது தான் பாரதத்தாய் கண் விழிப்பாள். ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் "இருந்தால் ஸ்வதந்திரனாக இருப்பேன், இல்லையேல் மடிவேன்" என்று பிரதிக்ஞை செய்துக் கொள்ளுங்கள். பிரதிக்ஞையை நிறைவேற்ற முன்வாருங்கள்.

சாதகபக்ஷி இந்த மஹாவிரதம் பூண்டு வெகுநாளாய் விட்டது. ஒவ்வொரு நாளாய் பலநாள் கழிந்தது. மழைகாலம் வந்திருக்கிறது. சில சமயம் மேகக் கூட்டங்கள் தென்படுகின்றன. நம்பிக்-

கை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இது வரை சாதகபக்ஷியின் கண்டம் நனைந்த பாடில்லை. வெகு தூரத்திலிருந்து வரக் கூடிய குளிர்ந்த காற்று, சிலசமயம் கார் முகிலின் நல்வரவைக் கூறுகிறது. சரீரம் புளகாங்கிதம் அடைகிறது. ஆனால் இவை எல்லாம் வெறும் நம்பிக்கை. மேகம் வந்து ஒருதுளி ஜலம்கூட பெய்ய வில்லை. இருந்தபோதிலும் மஹாவிரதி சாதகபக்ஷி எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டு திடமான நம்பிக்கையுடன் பேசாமல் மேல்நோக்கி உட்கார்ந்திருக்கிறது. கீழ்த்திசையிலிருந்து கார் முகில்கள் ஜல பாரத்தினால் தளர்வுற்ற உதரத்துடன் வருகின்றன. ஆனால் மழை பெய்யவில்லை. மேற்குத் திசையில் போகின்றன. மையில்லா வண்டியைப் போல் நிற்கவுமில்லை. ஆஹா! என்ன அற்புதமான திருவிளையாடல்? வைராக்கியமுள்ள சாதகபக்ஷி தன்னுடைய நோக்கத்திலேயே மெய்மறந்து ஆனந்தமாக வீற்றிருக்கிறது.

இந்த ஏமாற்றங்களினால் சாதகபக்ஷி தாகத்துடனேயே இருந்து விடுமா? அல்லது தன் பிராணனை தியாகம் செய்ய வேண்டுமா? அல்லது இந்தக் கடைசி கஷ்ட காலத்தில் வைராக்கியத்தைவிட்டு விட்டு மறுபடியும் உலக சம்பந்தமுடையதாகித் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியதாகவிருக்குமா? இச்சந்தேகங்களெல்லாம் அர்த்த மற்றவையாயும், ஆதாரமற்றவையாயு மிருக்கின்றன. பக்ஷி தாகத்தால் மூர்ச்சையாகி இவ்வுலகில் விழுந்தாலும் விழும். மூர்ச்சையுற்ற போதுகூட தெளிய வைக்க யாராவது வருவதாயிருந்தால், "இந்திரனே தானை ஜலம் எடுத்துக் கொண்டு வந்து, மூர்ச்சையை தெளியவைத்து மனம் களிக்கச் செய்வான். மாயைக் கடினமான இவ்வுலக ஜலம் மூர்ச்சையை போக்காது. மூர்ச்சையாகி கிடக்கும் சமயத்தில்கூட சதா ஜாக்ருதியிலிருக்கும் தன்னுடைய ஆத்மா, வேண்டாமென்று உதறித் தள்ளிய இந்த ஜலத்தை விரும்பாது. அதன் ஸ்பரிசத்தின் குணத்தைக்கூட அனுபவிக்காது" என்று சந்தேகமில்லாமல் திடமாகத் தன்னுடைய சித்தத்தில் சாதகபக்ஷி நினைத்துக்கொண்டிருக்கிறது. உண்மை தான். உலக வஸ்துக்கள் சௌந்தர்யத்தாலும், மாதுர்யத்தாலும் மோஹிக்கச் செய்யக் கூடியவைகள். மோஹம் என்ற மூர்ச்சையிலிருந்து மக்களை விழிக்க வைப்பதன் சக்தி இவைகளிடத்தில் எங்கே இருக்கிறது?

சகோதரர்களே! பயப்படாதேயுங்கள். சந்தோஷமாக யிருங்கள். பரீக்ஷையில் தேறுங்கள். தியாகம் செய்யவேண்டியதை தியாகம் செய்து விடுங்கள். அப்பொழுது எல்லாம் கைகூடும். வெற்றி பெறக்கூடிய பாக்கியம் பலம் பெற்றிருக்கிறது. ஆனால் கஷ்டமெனும் பரீக்ஷையில் மன திடத்துடனிருப்பதுதான் தாமதம். எவன் லௌகீக விஷயங்களை முற்றிலும் விலக்கிவிட்டானோ அவனுக்கு (தன்னுடைய) திவ்விய ஒளி எப்படி கிடைக்காமலிருக்கும். இன்று கிடைக்காவிடின் இரண்டு நாட்களுக்குப் பிறகு கிடைக்கலாம். அதற்குப் பிறகும் கிடைக்கலாம். பிறகு அவனுக்கு என்ன தான் கிடைக்காது. ஆகையால் ஒரு தடவை ஆசை எனும் தாகத்தை தியாகம் செய்யுங்கள்.

यच्च कामसुखं लोके, यच्च दिव्यं महत्सुखम् ।
तृणाक्षय सुखस्यैते नार्हतः षोडशीं कलाम् ॥

யச்சகாமசுகம் லோகே யச்ச திவ்யம் மஹத்சுகம்|
த்ருஷ்ணாக்ஷய சுகஸ்யைதே நார்ஹத: ஷோடஸீம்கலாம்||

"அதாவது லோகத்தில் காமசுகம் எது உண்டோ, திவ்வியமான பெரிய பேரின்பம் எது உண்டோ இவைகளெல்லாம் ஆசையை யழிப்பதால் ஏற்படும் சுகத்திற்கு வீசம் பங்கு ஆவதற்கும் அருகதையுள்ளதன்று." மின்சாரம்போல் சக்தி நிரம்பிய வியாசமுனிகளின் இவ்வாக்கியங்களையும் நம்புங்கள். ஒருதடவை தியாகம் செய்து பாருங்கள்.

தியாகம் என்று சொன்னமாத்திரத்தில் நீங்கள் சிரிக்கக்கூடும். உள்ளவனிடம் தியாகத்தை எதிர் பார்க்கலாம். இல்லாதவனிடம் தியாகம் செய்வதற்கு என்ன

இருக்கிறது என்று நீங்கள் கருதக்கூடும். "நாம்நித்தமும் பிறருக்குஉழைத்துழைத்துப் பலனைப் பறிகொடுத்து விட்டு ஒன்றுமற்ற ஒட்டாண்டிகளா யிருக்கிறோமே. தியாகம் செய்ய இன்னமும் என்ன இருக்கிறது. எலும்புக்கூடும், சுருங்கிய தோலும், குழிந்த கண்களும், தளர்ந்த மேனியும், மீளா வறுமையும், கடன் பளுவும், அறியாமையும் நிரம்பி, அதிகாரக் கொடுமைக்காளாகி யிருக்கும் நாம் செய்யத்தக்க தியாகம் ஒன்றுமில்லையே" என்று நீங்கள் மலைக்கக்கூடும். நாம்செய்யத்தக்க தியாகம்என்னவென்று உங்கட்குச் சொல்லுகிறேன். நாம் இந்நிலையிலிருப்பதற்குக் காரணம் நமது தலைவிதியே ஆகும் என்ற எண்ணத்தை நீங்கள் உங்கள் மனதினின்று இந்த க்ஷணமே அகற்றிவிட வேண்டும். ஒருவன் செல்வபோகத்தில் மூழ்கிக் கிடப்பதற்கும் அவனைச் சூழ்ந்துள்ள பல்லோர் வறுமைக்குழியில் ஆழ்ந்து நிற்பதற்கும் காரணம் அவர்கள் பூர்வ ஜன்மத்தில் செய்த பூஜாபலன்கள் என்ற தப்பான எண்ணத்தை நீங்கள் உடனே போக்கிவிட வேண்டும். அவன் வேறு, நான் வேறு என்ற வேற்றுமை உணர்ச்சியை நீங்கள் உங்கள் மனதினின்று தகர்த்தெறிய வேண்டும். உங்கள் நெஞ்சிலுள்ள பயத்தை, பயங்கொள்ளித் தனத்தை, அடிமைப்புத்தியை, லஞ்சம் கொடுத்தேனும், கைகட்டி வணங்கியேனும், காலில் விழுந்தேனும், நிலத்தையும், மகசூலையும், மாடு கன்றுகளையும், பட்டித் தொட்டிகளையும், வீடு வாசல்களையும், மனைவி மக்களையும், காசு பணங்களையும் காத்து ரட்சித்து இக்கும்பியை எப்படியாவது கழுவ வேண்டும் என்ற சிறுமைக் குணத்தை ஆழமான குழிதோண்டி நீங்கள் வெட்டிப் புதைக்கவேண்டும். "ஆறிலும் சாவு, நூறிலும் சாவு, நாங்கள் எதற்கும் அஞ்சோம். சத்தியம், நியாயம், தர்மம் ஆகிய முக்குணங்களுக்கே அஞ்சுவோம். மற்ற அனைத்தையும் தகர்ப்போம். அவ்வாறு தகர்ப்பதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைத் துச்சமாகக் கருதுவோம். மக்களின் சந்தோஷ வாழ்வுக்காக நாங்கள் எங்கள் உயிரையும் இழக்கத் தயாராக இருப்போம்" என்ற எண்ணத்தை, திட வைராக்கியத்தை, சாதகபக்ஷிபோல் நீங்கள் கைக்கொள்ள வேண்டும். உங்களிடம் நான் விரும்பும் தியாகம் இதுவேயாகும்.

நீங்கள் சிறிதளவு தியாகம் செய்த கஷ்டத்திற்கு வியாகூலமடைகிறீர்கள். தங்கள் ஈரற்குலை நடுங்குகிறது. "ஐயோ, நான் இறந்தேன் ஐயோ, நான் போய் விட்டேன்" என்கிறீர்கள். ஆனால் திடமாகவும், வைராக்கியத்துடனும், உயிரைத் திரணமாக மதித்து சாதகபக்ஷி போல் தியாகம் செய்வீர்களேயானால் தெரியும் என்றுமழியாத உண்மையான ஆனந்தம். இன்பம்.

அறிவிலாத தைரியமற்றோர்களே! நீங்கள் எப்பேர்ப்பட்ட பயங்கர சுழலில் வீழ்ந்திருக்கிறீர்கள்? எந்த மோகத்தில் சிக்கியிருக்கிறீர்கள்? சற்று அறிவு செலுத்திப் பார்த்தீர்களா? எவன் தாகத்தை ஜெயித்தானோ அவனை தாகம் தொந்தரவு செய்ய முடியுமா? அவனை மூர்ச்சையாக்கி வீழ்த்த முடியுமா? என்பதை அறிய உங்களுக்கு ஞானமில்லை. அந்த தியாகமெனும் அமிர்தத்தை சாதகஅடிக்க மரணம் வரமுடியுமா? நண்பர்களே! தியாகம் செய்வதில் பயம் கிடையாது. ஆகையால் தாகத்தை (பேராசை) தியாகமெனும் நெருப்பில் சுட்டு சாம்பலாக்குங்கள். வைராக்கியத்துடன், திடமான நம்பிக்கையிலிருங்கள். அப்பொழுது உங்களை தனதாக்கிக் கொள்வதற்காக கடவுள், தானாகவே தன் சிம்மாசனத்தை விட்டிறங்குகிறாரா இல்லையா என்பதைப் பாருங்கள்.

ஆய்தத்தின் வலிமை

(வே. ரா. சுந்தரராமன், எம். ஏ.)

நாம் உச்சரிக்கும் ஒலிகள் எல்லாவற்றையும் எழுதுவதற்குத் தேவையான எழுத்துக்கள் நம் தமிழ் மொழியின் நெடுங்கணக்கில் உண்டா? இது வெகு காலமாகக் கேட்கப்பட்டு வரும் ஒரு பழைய கேள்வி. இக் கேள்விக்குப் பெரும்பாலோரால் அளிக்கப்படும் விடை, “இல்லை” என்பதுதான். இந்த விடை சரிதானா இல்லையா என்பதை இக் கட்டுரையில் சற்று ஆராய்வோம்.

தமிழ் மொழியின் நெடுங்கணக்கில் குறைகள் உண்டு என்போர் அதை வட மொழியின் அக்ஷரங்களுடன் ஒத்திட்டுப் பார்க்கின்றனர். நம்முடைய வல்லினத்தில் முதல் ஐந்து எழுத்துக்களை எடுத்துக்கொண்டு அவைகள் ஒவ்வொன்றிற்கும் வடமொழியில் நான்கு எழுத்துக்கள் இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். ஆகையால் அவைகளுக்கு நேரான உச்சரிப்புகளைக் குறிக்க நம் தமிழ் பாஷையில் எழுத்துக்கள் இல்லை. அதனால் தமிழின் நெடுங்கணக்கில் குறை யுண்டு என்று முடிவு கட்டுகின்றனர். இவர்கள் குறிக்கும் எழுத்துக்கள் அடியிற் கண்டவை :—

தமிழ்	வடமொழி
க	क—க. 1, ख—க. 2, ग—க. 3, घ—க. 4
ச	च—ச. 1, छ—ச. 2, ज—ச. 3, झ—ச. 4
ட	ट—ட. 1, ठ—ட. 2, ड—ட. 3, ढ—ட. 4
த	त—த. 1, थ—த. 2, द—த. 3, ध—த. 4
ப	प—ப. 1, फ—ப. 2, ब—ப. 3, भ—ப. 4

இத்துடன் வட மொழியிலுள்ள श, ष, स, ह, ळ, என்னும் எழுத்துக்கள் தமிழில் இல்லை, இவைகளுள் முதல் எழுத்தாகிய ‘श’ என்பதை நாம் நம்முடைய ‘ச’ என்பதில்தான் குறிக்கிறோம். ஏனைய நான்கு எழுத்துக்களைக் குறிக்க தற்காலம் நாம் முறையே ‘ஷ’ ‘ஸ’, ‘ஹ’, ‘க்ஷ’ என்னும் கிரந்த லிபியிலுள்ள எழுத்துக்களுடைய உதவியையே நாடுகிறோம். ஆகையால் நம் மொழியின் எழுத்துக்களில் குறை உண்டு என்றும் ஒரு ஆக்ஷேபணை. ஆனால் வடமொழியில் காணப்படாத நம்முடைய மொழியிலே உள்ள ‘எ’, ‘ஒ’, ‘ழ’, ‘ள’, ‘ற’, ‘ன’ என்னும் எழுத்துக்களை இவர்கள் கவனிப்பதே யில்லை.

சமீபகாலத்தில் இந்தப் பிரச்னையை ஆராய்ந்து தெளிவான சில முடிவுகளுக்கு வந்திருப்பவர் நமது மாஜி பிரதமந்திரி ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாவர். “கலைமகள்” பத்தாந் தொகுதியில் 1936-ம் வருஷம் ஜுலை மாதத்திய இதழில்—அப்பொழுது அவர் சென்னை மாகாண அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை—9-ம் பக்கத்திலிருந்து 12-ம் பக்கத்திற்குள்ளடங்கிய “தமிழ் எழுத்துக்களின் குறையும் உச்சரிப்பு முறையும்” என்னும் தலைப்பிட்ட கட்டுரையில் இவருடைய ஆராய்ச்சிகளை இவர் தமிழுலகுக்குக் கொடுத்தார். இவ்வாராய்ச்சிகளின் முடிவுகளை கீழ்க்கண்டபடி சுருக்கிச் சொல்லிவிடலாம் :—

தமிழ் மொழியின் சில வல்லின எழுத்துக்களுக்குப் பதிலாக வடமொழியில் நந்நான்கு எழுத்துக்கள் இருப்பது தமிழ் நெடுங்கணக்கிற்கு ஒரு குறையாகாது. ஏனெனில் தமிழ் மொழியில்

மொழியில் இவை தோன்றுமிடம்	தமிழ் வல்லினங்கள் (முதல் ஐந்து)									
	க		ச		ட		த		ப	
	உச்சரிப்பு	உதாரணம்	உச்சரிப்பு	உதாரணம்	உச்சரிப்பு	உதாரணம்	உச்சரிப்பு	உதாரணம்	உச்சரிப்பு	உதாரணம்
முதலில்	க—1 (=क)	கிளி குதிரை	श	சுவை	...	...	த—1 (=त)	தகப்பன் தாய்	ப—1 (=प)	பசு
இடையில்	ஹ (=ह)	தகுதி பகுதி	श	ஆசான்	ட—3 (=ड)	வடக்கு	த—3 (=द)	மாதம்	ப—3 (=ब)	களபம்
ஈற்றில்	ஹ (=ह)	வகை புகு	श	பசு	ட—3 (=ड)	கடை	த—3 (=द)	பாதி	ப—3 (=ब)	மரபு
இரட்டிக் கையில் }	க—1 (=क)	பக்கம் அக்கா	ச—1 (=च)	பச்சை அச்சம்	ட—1 ट	கட்டு பட்டை	த—1 (=त)	மெத்தை வாத்து	ப—1 (=प)	கப்பல்
மெல்லின ஒற் றிற்குப் பின் }	க—3 (=ग)	பங்கு தங்கம்	ச—3 (=ज)	பஞ்சு தஞ்சை	ட—3 (=ड)	பண்டம் வண்டி	த—3 (=द)	கூந்தல்	ப—3 (=ब)	வம்பு கம்பம்
"ற"கர ஒற் றிற்குப் பின் }	க—1 (=क)	கற்கண்டு	ச—1 (=च)	உற்சாகம்	...	...	த—1 (=त)	பொற் தகடு }	ப—1 (=प)	அற்பம்

உள்ள வல்லின எழுத்து ஒன்றைக் கொண்டே சந்தர்ப்பத்திற்கு ஏற்றாப் போல் வடமொழியில் மிகுதியாயுள்ள எழுத்துக்களின் உச்சரிப்பையும் நாம் குறிக்கிறோம். இப்படி நாம் குறிப்பதையும் ஒழுங்குடன் சில பொது விதிகளுக்குள் அடக்கியே செய்கிறோம். இவ்விதிகள் தக்க உதாரணங்களுடன் முன் பக்கத்தில் காண்பிக்கப்பட்ட கட்டடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பு :— தமிழ்மொழியில் ‘ட’ என்னும் எழுத்து சொல்லின் முதலில் வராது. சில சமயத்தில் ‘டமாரம்’ போன்ற சொற்களில் வரும்போதும் அதற்கு ‘ட-3’ அதாவது “ड” என்னும் உச்சரிப்பே.

இந்த முடிவுகளினால் தமிழ் ஒலிகளை தமிழர்களுக்கு எழுதிக் காட்டுவதில் நம்முடைய நெடுங்கணக்கில் ஒருவித குறையுமில்லையென்று இவர் காட்டுகிறார். ஆனால் பிற பாஷைகளிலுள்ள ஒலிகளைத் தமிழில் குறிப்பதில் நம்முடைய எழுத்துக்களின் அமைப்பில் குறைகள் உண்டு என்றும் கடைசியில் அவர் ஒருவாறு ஒப்புக்கொள்ளுகிறார்.

இவ்வாராய்ச்சிகளினால் ஸ்தாபிக்கப்பட்டது, உண்மையில் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாப்போல் நம் மொழியிலுள்ள முதல் ஐந்து வல்லினங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட உச்சரிப்பு உண்டு என்பது தான். ஆனால் ஒரு பாஷையின் நெடுங்கணக்கு குறைவின்றிருக்கவேண்டுமானால் இதுமட்டும் போதாது. அந்நிய பாஷைகளிலுள்ள எந்த சத்தத்தையும் எழுத்து வடிவமாய் அமைக்க அம்மொழியில் தகுந்த சாதனங்கள் இருக்கவேண்டும். இல்லாவிடில் அம்மொழி குறையுள்ளதேயாகும்.

மேலும் சந்தர்ப்பத்திற்கேற்றபடி நம் மொழியிலுள்ள ‘க’, ‘ச’, ‘ட’, ‘த’, ‘ப’ என்னும் எழுத்துக்களுக்கு முறையே வடமொழியிலுள்ள क (க-1), ग (க-3), ह (ஹ); च (ச-1), ज (ச-3), श; ट (ட-1), ड (ட-3); त (த-1), द (த-3), प (ப-1), ब (ப-3); என்னும் உச்சரிப்புகள் உண்டென்பதை இப்பாஷையுடன் நெருங்கிய பழக்கம் உள்ளவர்கள் தான் தெரிந்து கொள்ள முடியும். புதிதாய் இம்மொழியைக் கற்கும் ஒருவருக்கு இந்த வித்தியாசம் எளிதில் புலப்படாது. தவிர, யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர்கள் பேசும் மொழிகளில் இந்த வித்தியாசம் காணப்படவில்லையென்பதை நான் பல நண்பர்களிடமிருந்து கேட்டிருப்பதுடன் என் சொந்த அனுபவத்திலும் கண்டிருக்கிறேன்.

எனவே தமிழ் நெடுங்கணக்கு குறையில்லாதது என்பதை ஸ்தாபிக்கவேண்டுமானால் பிற பாஷையிலுள்ள எந்த ஒலியையும் இவ்வெழுத்துக்களின் உதவியைக்கொண்டே எழுதிக் குறிப்பிடலாம் என்பதைத் தக்க உதாரணங்களுடன் காட்டவேண்டும். இது சாத்தியமான காரியமா என்பதைச் சற்று கவனிப்போம்.

நம்முடைய நெடுங்கணக்கில் உயிருமின்றி, மெய்யுமின்றி, உயிர்மெய்யுமின்றி, விசித்திரமான ஓர் தனியெழுத்து இருப்பதை நாமெல்லோரும் அறிவோம். இது ‘ஃ’ என்னும் வடிவமுள்ள, மூன்று புள்ளிகளினாலாக்கிய ‘ஆய்தம்’ என்பது. இது எதற்காக நம்முடைய நெடுங்கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை நம்மில் பலர் ஆராயவில்லையென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. இல்லாவிடில் அதன் பெருமை நன்கு அறியப்பட்டு, அவ்வெழுத்து இத்தனை நாள் வெகுவாய் பிரயோகத்தில் வந்திருக்கும். ஆனால், தற்பொழுதோவெனில் அதை ‘அஃது’, ‘இஃது’, ‘அஃறிணை’, என்பன போன்ற சில சொற்களில் தான் நாம் காண்கிறோம்.

பண்டைக் காலத்திய படைக்கலன் ஒன்றின் உருவை ஒத்திருந்தால் அதற்கு ‘ஆய்தம்’ (‘ஆயுதம்’ என்னும் பொருளில்) என்ற பெயர் வந்திருக்கிறதென்பதைத் தவிர நமக்கு இவ்வெழுத்தைப் பற்றி தற்போது கிடைத்திருக்கும் வரலாறு வேறு இல்லை.

தொல்காப்பியத்திலிருந்து எடுத்தாளப்பட்டதாயுள்ள அடியிற் குறித்திருக்கும் நன்னூல் சூத்திரத்திலிருந்தும் நாம் இவ்வெழுத்தைப் பற்றி விசேஷமாய்த் தெரிந்துகொள்ளுவது ஒன்றுமில்லை.

"குறியதன் முன்னராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன்
மிசைத்தே"

இவ்வெழுத்தைக் குறித்து ஏதாவது விசேஷமான வரலாறுகள் கிடைக்கலாமென்று எதிர்பார்த்தவனாய், 'பிஷப் கால்ட்வெல்டு' என்பவர் எழுதியிருக்கும் 'திராவிட பாஷைகளின் இலக்கண ஒற்றுமை வேற்றுமைகள்' என்னும் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தேன். ஆனால் ஏமாந்தேன். வடமொழியில் 'ः' என்னும் வடிவத்துடன் இரண்டு புள்ளிகளால் ஆக்கப்பட்ட 'விஸர்க்கம்' என்னும் எழுத்துதான் தமிழில் 'ஃ' என்னும் 'ஆய்தமாய்' வழங்குகிறது என்று மட்டுமே அவ்வாசிரியர் குறித்திருக்கிறார். ஆனால் இது அவ்வளவு சரியில்லையென்பது என்னுடைய துணிபு.

சற்று ஆராய்ந்து பார்த்தால் நமக்கு வேண்டிய ஒலியை எழுதிக்காட்ட ஓர் சாதனமாய்த்தான் இது நம்முடைய நெடுங் கணக்கில் அமைந்திருக்கிறது என்று விளங்குகிறது. இவ்விஷயத்தைப் பற்றித் தீர ஆராய்ந்து அறிவதற்குமுன் நம்முடைய எழுத்துக்களின் ஒலிகள் எப்படி உண்டாக்கப்படுகின்றன என்பதைச் சற்று கவனித்தல் அவசியம்.

நம்முடைய 'வாக்கு' (அதாவது 'தொண்டை' யென்று சொல்லப்படும் பாகத்தில் உண்டாவது) தொனிக்கும்பொழுது வாயினுள் உள்ள அவயவங்களுக்குள் ஒன்றுக்கொன்று சேர்வதனால் தான் அக்ஷரங்களின் ஒலிகள் உண்டாகின்றன. இதை விளக்குவதற்காக அடியிற்கண்ட உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன:—

'க்'—என்னும் மெய்யெழுத்தானது அடி நாக்கும் வாயின்மேல் பாகத்தின் உட்புறமும் ஒன்றோடொன்று சந்திப்பதால் உண்டாகிறது.

'ப்'—இது இரு உதடுகளும் ஒன்றோடொன்று சேர்வதனால் உண்டாகிறது.

இம்மாதிரி எழுத்துக்களின் ஒலியை உச்சரிக்கும்பொழுது, அந்தந்த அவயவங்களை ஒன்றுடன் ஒன்று சேரவொட்டாமல் தடுத்துவிட்டால் சில புதிய ஒலிகள் உண்டாவதைப் பிரத்தியக்ஷமாகக் காணலாம். உதாரணமாய் 'ப' என்னும் எழுத்தின் ஒலியை இரண்டு உதடுகளையும் ஒன்று சேர்த்து உண்டுபண்ணுகிறோம். 'ப' என்பதை உச்சரிக்கும்பொழுது இவ் வுதடுகளின் சேர்க்கையைத் தடுத்துவிட்டால் "Fa" என்னும் ஆங்கில எழுத்தின் உச்சரிப்பு உண்டாகும். 'ப'வை உச்சரிக்குமுன் 'ஃ' என்பதையும் சேர்த்து இரண்டெழுத்துக்களையும் ஒரு மூச்சிலேயே உச்சரிக்க முயன்றால் இவ்விரு உதடுகளின் சேர்க்கை தடுத்துவிடப்படும். அதன் பயனாக 'ப' என்னும் எழுத்தின் முழு ஓசையும் வெளிவராமல் அரைகுறையாகவே உச்சரிக்கப்படுகிறது. அப்பொழுது கிடைக்கும் உச்சரிப்பு ஆங்கில நெடுங்கணக்கின் 'Fa' என்பது தான்.

இதேமாதிரி 'ஃ' என்பதைத் தகுந்த இடத்தில் மற்ற எழுத்துக்களுடன் முன்னேயோ பின்னேயோ சேர்த்து உச்சரிப்பதனால் நமக்குத் தேவையான ஒலிகளை உண்டுபண்ணிக் கொள்ளலாம். இதற்கு அத்தாட்சியாக சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:—

ஃ+க=க–2 (=ख)
ஃ+க+ஃ=க–3 (=ग)
ஃ+ச=ச–2 (=छ)
ஃ+ச+ஃ=ச–3 (=च)
ஃ+ப='Fa'
ஃ+ப்+ப=ப–2(=फ)

ஃ+ழ='Zha' என்பதுபோன்ற ஓர் உச்சரிப்பு. இது 'French' (=ஃ பிரென்சு) பாஷையில் அதிகப் பிரயோகமுள்ளது.

இம்மாதிரியே பலவகைகளில் 'ஃ' என்னும் எழுத்தை உபயோகித்து நமக்குத் தேவையான ஒலிகளை எழுத்தால் எழுதிக் காட்டலாம்.

'ச்'—என்னும் மெய்யெழுத்து மேல், வாயின் உட்புரத்தை நடுநாக்கு தொடுவதனுல் உண்டாகிறது.

'ட்'—என்பது நுனி நாக்கை வளைத்து மேல்வாயின் உட்புரத்தைத் தொடுவதனுல் உண்டாகிறது.

'த்'—என்பது மேல்வாயின் உட்புரத்தை நுனி நாக்கு தொடுவதனுல் உண்டாகிறது.

அந்நிய பாஷைகளின் ஒலிகளை நம் பாஷையில் எழுதிக் காட்டுவதற்கு தற்போது ஓர் புதிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. விஞ்ஞான சாஸ்திர விஷயமாய் நம் தமிழ் மொழியில் நூல்களும், கட்டுரைகளும் எழுதவேண்டி யிருப்பதால் இந்த அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆதலால்தான் இத்தகைய சாதனம் ஒன்றைக் கண்டுபிடித்து வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் உண்டாகி விட்டது.

உலகப் பிரஸித்தம் அடைந்திருக்கும் தென்னிந்திய விஞ்ஞான சாஸ்திர அறிவாளி ஸர். ஸி. வி. ராமன் என்பவர் புதிதாய்க் கண்டுபிடித்த "Raman Effect" என்னும் ஒளியின் தன்மையை மேற்கூறிய முறையில் "ராமன் எஃபெக்ட்" என்று எளிதில் எழுதிக்காட்டி விடலாம்.

அந்நிய பாஷைகளின் அக்ஷரங்கள் பல நம் மொழியில் இல்லாத குறையை நீக்கி நம் மொழியைக் குறையில்லாத ஓர் பாஷையாக்க 'ஆய்தம்' எவ்வளவு தூரம் உதவுகிறதென்பது இப்பொழுது விளங்குகிறதல்லவா?

நம்முடைய நெடுங் கணக்கில் அவ்வளவு வலிமையுள்ள ஆயுதமாய் அமைந்திருக்கிறது 'ஆய்தம்' என்னப்படும் தனியெழுத்து!



மயிர் உதிர்வதை உடனே
நிறுத்தாவிட்டால் வழுக்கைத் தலைதான்

இன்றே
கெஸ்ரின்
வாங்கி, உங்கள் கேசத்தை அழகு படுத்துங்கள்
ஒரு புட்டி 12 அணா
எல்லா ஷாப்பிலும் கிடைக்கும்
விக்டோரியா டிபோ
வடக்கு மாடவீதி, மைலாப்பூர்
சென்னை.

மண்டு வரதன்

"கி. மூ"

வரதன் ஒரு சோம்பேறிப் பயல். பெற்றோர்கள் சொல்வதைக் கேட்க மாட்டான். எதற்கெடுத்தாலும் வீம்பும் பிடிவாதமும் செய்து அசாத்ய ரகளை போடுவான். ஆனால் அவனுடைய அப்பா அவனை அடிப்பதேயில்லை. வரதன் ஒரே குழந்தையாகையால் அவனை பெற்றோர்கள் செல்வமாக வளர்த்து வந்தார்கள்.

வரதனுக்கு வயது எட்டாகியும், அவன் சரியாகப் பள்ளிக்கூடத்திற்குப் போகமாட்டான். ஆதலால் அவனுக்கு நன்றாக எழுதப் படிக்கத் தெரியாது. பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் ஏதாவது கேள்வி கேட்டால், அவன் ஏதாவது உளறி வைப்பான். இல்லாவிட்டால் ஒன்றுமே தெரியாமல் விழிப்பான். அப்பொழுது மற்ற பையன்கள் எல்லோரும் அவனைப் பார்த்துப் பரிகாசம் செய்து கைகொட்டிச் சிரிப்பார்கள். பாவம் எல்லோரும் அவனை 'மண்டு வரதன்' என்று கூப்பிட்டார்கள். அவன் உபாத்தியாயர் ராமய்யருக்கு அடிக்கடி கோபம் வந்துவிடும். ஆனால் பெரியவீட்டுக் குழந்தையென்று, வரதனை அடிக்காமல் விட்டிருந்தார்.

ஒருநாள் வரதன் பள்ளிக்கூடத்திற்கு இன்ஸ்பெக்டர் வந்திருந்தார். அன்றைய தினம் பள்ளிக்கூடத்தில் எல்லோரும் ஆஜராகியிருக்க வேண்டுமாதலால் உபாத்தியாயர் ராமய்யர் வரதனையும் அவன் வீட்டிற்குச் சென்று பள்ளிக்கூடத்திற்கு இழுத்துக் கொண்டு போனார். வரதன் பாவம், அழுது கொண்டே அவர் பின்னால் சென்றான்.

அன்று இன்ஸ்பெக்டர் ஒவ்வொரு வகுப்பாகப் பரீக்ஷைசெய்துவிட்டு வரதன் வகுப்பிற்கும் வந்து, வரிசையாக ஒவ்வொரு பையனையும் கேள்விகள் கேட்டுக் கொண்டு வந்தார். அவர்கள் எல்லோரும் 'டக் டக்' என்று சரியாகப் பதில் சொல்லவும், இன்ஸ்பெக்டருக்கும் ராமய்யருக்கும் மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று.

பிறகு இன்ஸ்பெக்டர் ராமய்யரை ஒரு புதுப்பாடம் நடத்தும்படி கட்டளையிட்டார். ராமய்யர் "தபால்" என்னும் பாடத்தைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டு போனார். அப்போது இன்ஸ்பெக்டர் அவர் பையிலிருந்து ஒரு அணா தபால் ஸ்டாம்பு ஒன்றை வெளியில் எடுத்து, வரதன் முன் காட்டி, "இது என்ன தெரியுமா உனக்கு?" என்று கேட்டார்.

வரதனுக்கு தபால் ஸ்டாம்புகளின் மதிப்பே தெரியாது. அவன் அப்பாவிடமிருந்து பழைய ஸ்டாம்புகளை வாங்கி, பொம்மை யென்று சுவரிலே ஒட்டி விளையாடுவானாகையால், வரதன் கொஞ்சம்கூட

யோஜிக்காமல் இன்ஸ்பெக்டரிடம் "இது ராஜாவின் பொம்மை சார்" என்ருன்.

இன்ஸ்பெக்டருக்கு உடனே சிரிப்பு வந்துவிட்டது. மற்ற பையன்களும் சிரிப்பு தாங்கமாட்டாமல் வாயைப் பொத்திக் கொண்டார்கள். அதனல் உபாத்தியாயர் ராமய்யருக்கு அவமானமாய்ப் போய் விட்டது. வரதன்மேல் அவருக்குக் கோபம் அசாத்யமாய் வந்து விட்டது.

இன்ஸ்பெக்டர் போனபிறகு ராமய்யர், வரதனைக் கூப்பிட்டு பிரம்பால் கைக்கு இரண்டு அடிகள் சுளீர், சுளீர் என்று கொடுத்து விட்டார். அன்றுதான் அவர் வரதனை முதல் முதலாக அடித்தது.

சாயந்திரம் வரதன் அழுது கொண்டே வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அவன் அப்பாவிடம் நடந்ததைச் சொல்லி விம்மி விம்மி அழுதான். ஆனல் அவன் தந்தையும் அவனைக் கோபித்துக் கொண்டு, "உனக்கு நன்ருக வேண்டும். நீ பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் சுத்த மண்டுவாய் இருக்கிருயல்லவா? அதனல்தான் உபாத்தியாயர் உன்னை அடித்தார்" என்று சொல்லிவிட்டு அவரும் இரண்டு அடிகள் கொடுத்தார்.

அப்போதுதான் வரதனுக்குப் புத்தி வந்தது. தான் ஒரு மண்டு என்பதையும் தன்னை எல்லோரும் பரிகாசம் செய்வதையும் உணர்ந்தான். அன்றைய தினத்திலிருந்து அவன் நல்ல பையனுகி விட்டான். தினமும் சரியாகப் பள்ளிக்கூடத்திற்குப் போனன். அவனுடைய வீம்பு விஷமம் எல்லாம் எங்கேயோ போய்விட்டது. நன்ருகப் படித்து எல்லா வகுப்புகளிலும் முதலில் தேறி அநேக பரிசுகள் வாங்கினன். 'கெட்டிக்காரன்' என்று பேர் வாங்கினன்!

* * *

இப்பொழுது வரதன் என்ன செய்து கொண்டிருக்கிருன் தெரியுமா? தபால் இலாகாவில் ஒரு பகுதிக்கு தலைமை உத்யோகஸ்தனுக இருக்கிருன்!